விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
Ria
WESTERN UNION WU
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-2034)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 24 வெள்ளிக்கிழமை (07.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 139

## யாழில் கொரோனாவால் இருவர் உயிரிழப்பு

### வடக்கில் நேற்றும் 28 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழில் கொரோனாவால் இருவர் உயிரிழந்ததுடன் யாழ். மாவட்டத்தில் 20 பேர் உட்பட வடக்கில் 28 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக யாழ். போதனா ☛19

## கடந்த இரு நாட்களில் கொரோனாவால் 36 பேர் உயிரிழப்பு

### நேற்றும் + 1,895 தொற்றாளர்கள்

(கொழும்பு)

கடந்த இரு தினங்களில் கொரோனா தொற்றால் நாட்டில் 36 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் பகல் 11 மரணங்களும் நேற்று முன் தினம் இரவு 14 மர ணங்களும் நேற்று ☛19

## தமிழகத்தின் முதலமைச்சராக ஸ்டாலின் இன்று பதவியேற்பு

(சென்னை)

தமிழகத்தின் முதலமைச் சராக மு.க. ஸ்டாலின் இன்று காலை பதவியேற்கவுள்ளார்.

கவர்னர் மாளிகையில் இன்று காலை நடைபெற ☛19

## கொரோனாவால் கர்ப்பிணிகளுக்கு பெரும் ஆபத்து

(யாழ்ப்பாணம்)

முதல் 28 வாரங்களுக்குப் பின்னர் கர்ப்பிணிப் பெண்கள் கொரோனா தொற்றுக்கு உள் ளாகின்றமை ஒரு தீவிரமான நிலை என காசல் வைத்திய சாலையின் சிரேஷ்ட விஷேட வைத்தியர் ☛19

## கொரோனா அவலத்துக்கு மத்தியில்

# தேசிய வெசாக் நிகழ்வு நயினாதீவில் தேவையா?

### சுகாதார தரப்பு, புத்திஜீவிகள், அரசியல் தரப்பு ராஜபக்ச அரசாங்கத்திடம் கேள்வி

*(யாழ்ப்பாணம்)*

**கொரோனாத் தொற்றுக் காலத்தில் வெசாக் தேசிய நிகழ்வை நயினாதீவில் நடத்துவதற்கு பலதரப்புகளும் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன.**

கொரோனாத் தொற்று தென் பகுதியில் மிக மோசமாக பரவி வருகின்ற இவ் வேளையில், எதிர்வரும் மே 23 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை யான ஒரு வார காலத்திற்கு வெசாக் தேசிய நிகழ்வை நயி னாதீவில் நடத்துவதற்கு அரசு முனைப்புடன் செயலாற்றி வரு கின்றது.

இதற்கான ஏற்பாடுகள் தடல் புடலாக நடந்து வருகின்றது.

இதில் படைத்தரப்பினர் மும் முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாண நகர மையத்தில் இருந்து நயினாதீவு வரை வெசாக் வெளிச்சக் கூடுகளையும் அலங்கார வளைவுகளையும் அமைப்பதற்கு பௌத்த கலாசார அமைச்சு ☛19

## சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

### லாப்(f) கேஸ் நிறுவனம்

(கொழும்பு)

சமையல் எரிவாயு சிலிண் டர்களின் விலை அதி கரிப்பதற்கான அனு ☛19

## நாட்டில் அதிகரித்த கொரோனா தொற்றாளர்கள்

### தனியார் மருத்துவமனைகளிலும் கட்டில்கள் இன்றி இடப்பற்றாக்குறை

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற் றாளர்கள் அதிகரித்துள்ளதன் காரணமாக தனியார் வைத்தி யசாலைகளிலும் கொரோனாத் தொற் ☛19

## யாழ். போதனாவில் உயிரிழந்தவருக்கு கொரோனா தொற்று உறுதி

### மரண வீட்டுக்கு சென்றவர்கள் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த நபரு டைய சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் அவருக்கு கொரோனா தொற்று உறுதியான நிலையில் மரணச் சடங்கில் கலந்து கொண்ட 30 குடும்பங்கள் தனிமைப்படுத் தப்பட்டுள்ளன.

யாழ். சிறாம்பிய ☛19

## யாழில் இளைஞர்களை தாக்கும் புதிய கொரோனா வைரஸ்

### நேற்றும் 6 பேருக்குத் தொற்று

(யாழ்ப்பாணம்)

நாட்டில் புதிதாக பரவிவரும் திரிபடைந்த கொரோனா வை ரஸ் இளைஞர்களை அதிகமாக தாக்குவதாக தெரிவிக்கப்பட் டுள் ளது

யாழில் நேற்று மேற்கொள் ளப்பட்ட பரிசோதனை யில் தேக ஆரோக்கிய ☛19

## வவுனியா பொருளாதார மத்திய நிலையம்

### கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றம்

(வவுனியா)

வவுனியா பொருளாதார மத் திய நிலையத்தை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்று வதற்கான நடவடிக் கைகள் இடம்பெற்று வருகின்றது.

நாட்டில் கொரோனா மூன்றாம் ☛19

## யாழ். போதனாவின் 2ஆம், 3ஆம் விடுதிகள்

### கொரோனா சிகிச்சை பிரிவாக மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையின் 2ஆம், 3ஆம் இலக்க விடுதிகள் கொரோனா தொற் றாளர்களுக்கு சிகிச்சையளிப் பதற்கான தனிமைப்படுத்தல் விடுதியாக மாற்றப்பட வுள்ளதாக யாழ். ☛19

## வவுனியாவில் பொலிஸாருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா பொலிஸ் நிலைய பெண் உத்தியோகத் தருக்கு [illegible] ☛19

## கொரோனா அபாய வலயமாக கிளிநொச்சி

(கிளிநொச்சி)

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் கிளி நொச்சி பொது வைத்தியசா லைக்கு சிகிச்சைக்கு செல்லும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவரு கின்றமை தொடர்பில் கிளிநொச்சி மக்கள் மிகுந்த அவதா னத்துடன் சுகாதார ☛19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றாளர்களுக்கு தனியான அறை ஒதுக்குங்கள்

## பிரதான மருத்துவமனைகளுக்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்று தினமும் அதிகரித்து வரும் நிலையில் பிரதான மருத்துவமனைகளுக்கு சுகாதார அமைச்சு முக்கிய அறிவுறுத்தலொன்றை விடுத்துள்ளது.

நாட்டில் உள்ள பிரதான மருத்துவமனைகள் அனைத்திலும் கொரோனா தொற்றாளர்களுக்காக தனியான அறை ஒன்றை ஒதுக்குமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளதாக தொற்று நோயியல் பிரிவின் பிரதானி சுதத் சமரவீர தெரிவித்தார்.



சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-3)

# யாழைத் தொடர்ந்து கொழும்பிலும் சுகாதார விதியை மீறியோர் தூக்கிச் செல்லப்பட்டனர்

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் முக கவசம் அணியாமை மற்றும் சுகாதார நடைமுறைகளை மீறியவர்கள் தூக்கி செல்லப்பட்ட நிலைபோன்று கொழும்பிலும் நேற்று முகக் கவசம் அணியாமை மற்றும் சுகாதார நடைமுறைகளை மீறிய 51 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு டாம் வீதி பொலிஸார் நேற்று இந்த சிறப்பு நடவடிக்கையினை மேற்கொண்டு 51 பேரை கைது செய்திருக்கின்றனர். இதேவேளை இன்று தொடக்கம் இதே மாதிரியாக யாழ்.மாவட்டத்தில் சகல பிரதேசங்களிலும் சிறப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-3)





# பதவி வெற்றிடங்கள்

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

வட மாகாணத்தில் முன்னணி பாதுகாப்பு சேவையை வழங்கும் நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகப் பணிபுரிவதற்கு ஆண், பெண் இருபாலாரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான தகைமைகள்**

1. க.பொ.த (சா/த)
2. உயரம் - 5'4"
3. மார்பு - 32"

**விசேட தகைமைகள்**

சாரணர்கள், விளையாட்டுத்துறை வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
23 வயதுக்கு மேற்பட்டவர்கள் வரவேற்கத்தக்கது.

## சுத்திகரிப்பாளர்கள்

சுத்திகரிப்பு பணியாளர்களாக யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி பகுதியில் பணிபுரிவதற்கு ஆண், பெண் இருபாலாரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

1. 8ஆம் ஆண்டு வரை கல்வி கற்றிருக்க வேண்டும்.
2. முன்அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. **வயதெல்லை:** 20 முதல் 50 வயது வரை விரும்பத்தக்கது.

## அலுவலக பணியாளர்கள்

காரியாலயத்தில் பணிபுரிவதற்கு கணினியில் நன்கு தேர்ச்சி பெற்ற அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.
வயதெல்லை: 25 - 35 வரை

(C-2116)

**பொதுவான விபரம்**

1. சகலரும் கிராம அலுவலரின் நற்சான்று பத்திரம்.
2. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
3. கல்வித் தராதரம்
4. தே.அ.அ பிரதி ஆகியவற்றுடன் நேர்முகத்தேர்வுக்கு 09.05.2021 - 14.05.2021 இற்கு இடைப்பட்ட நாட்களில் 9.00 am - 3.00 pm வரை நேரில் சமுகம் தரவும்.

**துவாரகம்**
வடமராட்சி வலயக் கல்விப் பணிமனை வீதி,
1ஆம் கட்டை, பருத்தித்துறை. 021 226 4843



# வடமராட்சி வடக்கு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்



## வருடாந்த வெளிமடை உற்சவம் 2021.05.14, 15ஆம் திகதிகளில்

### அறிவித்தலும் ஆசித்தலும் பூஜித்தலும்

**நிகழும் பிலவ வருடம் சித்திரை மாதம் 24ஆம் நாள் (07.05.2021) வெள்ளிக்கிழமை விளக்கு வைத்தலும் தொடர்ந்து (14.05.2021) வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் நடைபெற இருக்கும் அனைத்து தெய்வதாகைங்கரியங்களும் பூர்வீகமுறை பிழையாது நடைபெறத் திருவருள் நிறைய எல்லாம்வல்ல அன்னை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மனை ஆசிவேண்டியும் அடிபணிந்து வாழ்த்திக் கொண்டும் அனைத்து நிலையடியார்களும் அன்பர்களும் உரித்தாளர்களும் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டும் சுகாதார அறிவுறுத்தல்களையும் மிகவும் அனுசரித்து தனித்தனியாக வந்து அனைத்து வழிபாடுகளையும் வேண்டுதல்களையும் நிறைவேற்றிக் கொள்க:- காவடி, கரகம், பால் செம்பு எடுத்தல், தீ மிதித்தல் அனைத்து நேர்த்திகளையும் இரட்டிப்பாக இனிவரும் காலத்தில் செய்து கொள்ளல் நலம் எனக:- உணர்க:- அன்னையை எல்லோரும் வேண்டிக் கொள்வோம்.**

குறிப்பு : தும்பளை நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வட பத்திரகாளியம்மன் வேள்வி (07.05.2021 - 08.05.2021) நடைபெறும். ஆசித்தலும் பூஜித்தலும் சிறப்புற அன்னை அருள் தருக:-

*நெல்லண்டை அம்மன் துதி*

உலகாண்ட நாயகியாய் காட்சிதந்தாய்
உக்கிரமமாய் தாண்டவமும் ஆடிக் கொண்டாய்
சில காலம் சிவன் நோக்கி நிட்டை கொண்டாய்
சிட்டர்களுக்கு அபயகரம் நீட்டி ஆண்டு நின்றாய்
பல வகை தருமங்கள் போதித்தாண்டாண்டாய்
பக்குவமாய் என்பாச வினை நீக்கினாய்
நலம் சேர் உன்னருள் தரிசன ரூபியாய்
தினம் தினம் பொருள் கொண்டாள்வாயோ!

**(தும்பளை நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வடபத்திரகாளி அம்மன் துதி - )**

வாராத சித்திதரும் தெய்வம் மராசுரனை
மகிடனை வதைத்த தெய்வம்
மன்னர் மனை வைத்தே வணங்கிடும் தெய்வ முயர்
மாப்பிரம்மன் வாழ்த்தும் தெய்வம்
வீரனாம் சண்டமுண்டன்தனை வீழ்த்தியே
விண்ணவரைக் காத்த தெய்வம்
வீரபத்திரருடன் சென்றுமே தக்கனது
வேள்வியை அழித்த தெய்வம்
விண்ணவர்கள் ஆணவச் செருக்கினை அடக்கியே
வைத்திட்ட வலிய தெய்வம்
தீராத நோய்களினைத் தீர்க்கின்ற தெய்வமென்
சிந்தைக்குள் நின்ற தெய்வம்
தென்னவர் முதலாய முடி மன்னர் போற்றிடும் தெய்வம்
செயவீரமா காளி வடபத்திர காளி தெய்வமே!
**சுபமஸ்து**



**அன்னையின் அடிமை - ஆதீனகர்த்தா, சைவ சித்தாந்த பண்டிதர்**
**சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜக் குருக்கள் (B.A, Dip. In Edu. M.A) ஓய்வுநிலைப் பிரதி அதிபர்**
**தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன், இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தானாதிபதியும் பிரதம குருவும் தும்பளை, பருத்தித்துறை. 077 620 2716**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாரத்திற்கேனும் நாட்டை முடக்குங்கள்



## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

**(கொழும்பு)**

**நாளாந்தம் கொவிட்-19 தொற்றுறுதியாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமையினால், ஒரு வாரத்திற்காகவது நாட்டை முடக்குமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இதனை தெரிவித்தார்.

அத்துடன், அரச மற்றும் தனியார் துறைகளில் மாநாடுகள், சேவையாளர்களின் சந்திப்பு என்பன இடம்பெறுவது தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்களின் பிரதானிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# 'மத்தள' வந்தால் இலவசம்

(கொழும்பு)

மத்தள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும் அல்லது தரித்து நிற்கும் சகல விமானங்களிடமிருந்தும் எவ்வாறான கட்டணங்களையும் இரண்டு வருடங்களுக்கு அறவிடாதிருக்க தீர்மானித்துள்ளதாக சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதனால், மத்தள விமான நிலையத்துக்கு வரும் விமானங்கள் மற்றும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த விமான நிலையத்துக்கு விமானங்களை வரவழைப்பது குறித்து லயன் எயார், உக்ரேன் எயார் லைன், இன்டிகோ, எயார் இந்தியா, எயார் விஸ்தாரா, சலாம் எயார், எமிரேட்ஸ், மோல்டிவியன் எயார் ஆகிய விமானச் சேவைகள் நிறுவனங்களுடனான கலந்துரையாடல் நிறைவடைந்துள்ளதென்றும் இதன் பலனாக 8 வெளிநாட்டு விமான நிறுவனங்கள் மத்தள விமான நிலையத்துக்கு விமானங்களை அனுப்பும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# மிகப்பெரிய கொரோனா சிகிச்சை நிலையம் தயார்



(கொழும்பு)

இலங்கை இராணுவத்தால் சீதுவ பகுதியில் அமைக்கப்பட்டுவரும் 1,200 படுக்கைகளைக் கொண்ட மிகப் பெரிய கொவிட்-19 சிகிச்சை மையத்தின் பணிகள் கிட்டத்தட்ட நிறைவடையும் நிலையில் உள்ளன.

இந்த சிகிச்சை மையத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததும் தொடர்ந்து கொரோனாத் தொற்று நோயாளிகள் இங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்படவுள்ளனர்.

தீவிர சிகிச்சைப் பிரிவு வசதி, தனிமைப்படுத்தல் வசதிகளை உள்ளடக்கிய இலங்கையில் மிகப் பெரிய கொரோனாச் சிகிச்சை மையமாக இது அமையவுள்ளது.

1,200 படுக்கைகள் கொண்ட சிகிச்சை மையத்தை அமைக்கும் பணியில் இராணுவத்தின் சேவா வனிதா பிரிவு தீவிரமாக ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஆட்டோவில் இருவர் மட்டுமே பயணிக்கலாம்

## மீறினால் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளுக்கு புறம்பாக இடம்பெறும் கொண்டாட்ட நிகழ்வுகள், கருத்தரங்குகள் மற்றும் பொதுப் போக்குவரத்து, வாடகை அடிப்படையில் போக்குவரத்து செயற்பாடுகளில் ஈடுபடும் வாகனங்கள் தொடர்பில் கண்காணிக்கப்படுவதுடன் அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

கொவிட்-19 வைரஸ்தொற்றை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் கடந்த முதலாம் திகதி விசேட சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அந்த சுற்றுநிருபத்தின் படி கொண்டாட்ட நிகழ்வுகள், விருந்துபசாரங்கள், செயலமர்வுகள் உட்பட மக்கள் ஒன்றுகூடும் அனைத்து செயற்பாடுகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய, இந்த விடயங்கள் தொடர்பில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரை கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுப்போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்து ஒன்றின் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிகள் செல்ல அனுமதியுள்ளது.

இதன்போது வாடகை அடிப்படையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் கார் மற்றும் முச்சக்கர வண்டிகளில் சாரதிக்கு மேலதிகமாக இருவர் மாத்திரமே பயணிக்க முடியும். அவ்வாறு இல்லாமல் அதிக பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் உரிமையாளர்கள், சாரதிகள், சாரதி உதவியாளர்கள் மற்றும் வாகன நடத்துநர்கள் ஆகிய அனைவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இதனுடன் தொடர்புடைய வாகனங்களைப் பொலிஸார் பறிமுதல் செய்வர் என அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)

# இலங்கையர்களுக்கு தடை விதித்தது மலேசியா

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் இலங்கையர்கள் மலேசியாவுக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்தத் தடையை மலேசிய அரசு விதித்துள்ளது என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாட்டவர்கள் வருவதற்கும் மலேசிய அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# இந்திய விமான சேவைகள் இடை நிறுத்தம்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கான பயணிகள் விமான சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. சிவில் விமான சேவைகள் அதிகாரசபை இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரிப்பைத் தொடர்ந்து உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபை மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன்ஸ் லீக் கால்பந்து
## மான்செஸ்டர் சிட்டி இறுதிக்கு தகுதி



ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டி தொடர் பல்வேறு இடங்களில் நடந்து வருகிறது. விறுவிறுப்பான இந்த போட்டி இறுதி கட்டத்தை எட்டி விட்டது.

32 அணிகள் பங்கேற்ற இந்த போட்டியில் மான் செஸ்டர் சிட்டி, பாரிஸ் செயின்ட் ஜெர்மைன், ரியல் மாட்ரிட், செல்சியா ஆகிய அணிகள் அரைஇறுதிக்கு முன்னேறின.

இதில் இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டரில் இந்திய நேரப்படி நேற்று முன்தினம் அதிகாலை நடந்த அரைஇறுதியின் 2 ஆவது சுற்று ஆட்டத்தில் மான்செஸ்டர் சிட்டி-பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் 11 ஆவது நிமிடத்தில் மான்செஸ்டர் சிட்டி அணி முதல் கோல் அடித்தது. இதனால் முதல் பாதியில் மான்செஸ்டர் சிட்டி அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.


2 ஆவது பாதிஆட்டத்திலும் முதல் கோலை அடித்த ரியாத் மாக்ரெஸ் 63 ஆவது நிமிடத்தில் மீண்டும்ஒரு கோலை அடித்து அசத்தினார்.

இறுதியில் மான்செஸ்டர் சிட்டி அணி 2-0 என்ற கோல் கணக்கில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியை வீழ்த்தியது. அரைஇறுதியின் முதலாவது சுற்று ஆட்டத்தில் மான்செஸ்டர் சிட்டி அணி 2-1 என்ற கணக்கில் வென்று இருந்தது.

இதனால் ஒட்டு மொத்தத்தில் மான்செஸ்டர் சிட்டி அணி 4-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று முதல்முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டி துருக்கியில் உள்ள இஸ்தான்புல்லில் எதிர்வரும் 29 ஆம் திகதி நடக்கிறது. இதில் மான்செஸ்டர் சிட்டி அணி, ரியல் மாட்ரிட்-செல்சியா அணிகள் இடையிலான அரை இறுதிபோட்டியில் வெற்றி பெறும் அணியை எதிர்கொள்ளும். (4-6)

## ஒருநாள் தொடருக்காக பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி



மே 23 முதல் ஆரம்பமாகும் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு குறுகிய தொடரில் பங்கெடுக்க இலங்கை அணி பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற் கொள்ளவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் அறிவித்துள்ளது.

மே 16 ஆம் திகதி டாக்காவுக்கு புறப்படும் இலங்கை அணி குறுகிய தனிமைப்படுத்தலுக்குப் பிறகு மே 21 ஆம் திகதி பயிற்சி போட்டிகளில் பங்கெடுக்கும்.

அதன் பின்னர் மே 23, 25 மற்றும் 28 ஆகிய திகதிகளில் மீர்பூரில் உள்ள ஷெர் - இ - பங்களாதேஷ் தேசிய கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இலங்கை பங்களாதேஷுடன் பலப் பரீட்சை நடத்தும்.

இந்தச் சுற்றுப் பயணத்தினால் கொவிட்-19 தொற்று நோய்க்கு மத்தியில் பங்களாதேஷுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இரண்டாவது வெளிநாட்டு அணியாக இலங்கை இருக்கும்.(4-6)

# டெஸ்ட் தரவரிசையில்
## இலங்கை வீரர்கள் முன்னேற்றம்

அண்மையில் நிறைவடைந்த பங்களாதேஷ் அணிக்கெதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 3 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடிய திமுத் கருணாரட்ன 428 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

இத்தொடரில் டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் 244 ஓட்டங்களை அடித்து தனது முதல் இரட்டைச் சதத்தையும் பதிவு செய்தார்.

சர்வதேச கிரிக்கெட் சபையில் துடுப்பாட்ட டெஸ்ட் தரவரிசை கணக்கிடப்பட்டது. இதில் 677 புள்ளிகளுடன் 15 ஆவது இடத்திலிருந்த திமுத் கருணாரட்ன 45 புள்ளிகளைப் மேலதிகமாகப் பெற்று 4 இடங்கள் முன்னேறி 11 ஆவது இடத்தைப் பிடித்தார்.

துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தரவரிசையில் இவருக்கு அடுத்தபடியாக அஞ்சலோ மத்தியூஸ் 24 ஆவது இடத்திலும் தனஞ்சய டி சில்வா 32 ஆவது இடத்திலும், தினேஷ் சந்திமால் 50 ஆவது இடத்திலும் குசல் மெண்டிஸ் 54 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பங்களாதேஷ் தொடரில் பிரகாசித்த லஹிரு திரிமான்ன 60 ஆவது இடத்துக்கும் ஓஷத பெர்னாண்டோ 59 ஆவது இடத்துக்கும் முன்னேறியுள்ளனர்.

அறிமுக டெஸ்ட் போட்டியில் 11 விக்கெட்டுக்களை வீழ்த்திய பிரவீன் ஜயவிக்ரமவுக்கு 48 ஆவது இடம் மற்றுமொரு இளம் சுழற்பந்து வீச்சாளரான ரமேஷ் மெண்டிஸுக்கு 88 ஆவது இடம் கிடைத்துள்ளது. டெஸ்ட் பந்துவீச்சுத் தரவரிசையில் இலங்கை சார்பாக சிறந்த இடத்தில் (21 ஆவது) சுரங்க லக்மால் உள்ளார்.(4-6)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு
## இர்பான் பதான் உதவி



கொரோனா 2 ஆவது அலை காரணமாக நாடு முழுவதும் பாதிப்பு அதிகரித்து வருகிறது. அதிலும் குறிப்பாக டில்லி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

தெற்கு டில்லியில் கொரோனாவால் பாதித்த மக்களுக்கு தனது கிரிக்கெட் அக்கடமி சார்பில் தினசரி இலவசமாக உணவு வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஓல்-ரவுண்டரான 36 வயது இர்பான் பதான் நேற்று முன்தினம் அறிவித்தார். (4-6)


# மாட்ரிட் ஓபன் டென்னிஸ்
## அரை இறுதியில் ஆஷ்லி பார்ட்டி



மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த கால் இறுதி ஆட்டம் ஒன்றில் நம்பர் ஒன் வீராங்கனையான ஆஷ்லி பார்ட்டி (அவுஸ்திரேலியா) 6-1, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் தரவரிசையில் 12 ஆவது இடத்தில் இருக்கும் செக்குடியரசு வீராங்களை பெட்ரா கிவிடோவாவை வீழ்த்தி அரை இறுதிக்குள் நுழைந்தார்.

மற்றொரு கால் இறுதியில் ஸ்பெயின் வீராங்கனை பாலா படோசா 6-4, 7-5 என்ற நேர்செட்டில் பெலின்டா பென்சிக்கை (சுவிட்சர்லாந்து) தோற்கடித்து அரை இறுதிக்கு முன்னேறினார். அரை இறுதியில் ஆஷ்லி பார்ட்டி - பாலா படோசா ஆகியோர் மோதுகின்றனர். (4-6)

# முன்னாள் கிரிக்கெட் வீரரை
## துப்பாக்கி முனையில் கடத்தி தாக்குதல்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் மெக்கில். இவர், கடந்த மாதம் 14 ஆம் திகதி சிட்னியில் உள்ள அவரின் வீட்டின் அருகே நடந்து சென்றார். அப்போது காரில் வந்த மர்மநபர்கள் 4 பேர் மெக்கில்லை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றனர்.

சிட்னி நகரின் வேறு ஒரு இடத்துக்கு மெக்கில்லை கொண்டு சென்ற 4 பேரும் அவரைத் தாக்கி, மிரட்டியுள்ளனர். ஏறக்குறைய ஒரு மணிநேரம் மெக்கில்லை கடுமையாகத் தாக்கிவிட்டு அவரை விடுவித்துள்ளனர்.

தன்னைக் கடத்தி தாக்கியது குறித்து நியூ சவுத் வேல்ஸ் பொலிஸில் மெக்கில் புகார் அளித்தார். இது தொடர்பாக நியூ சவுத்வேல்ஸ் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து 4 பேரைக் கைது செய்தனர். அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான மெக்கில் 1998 முதல் 2008 ஆம் ஆண்டு வரை அவுஸ்திரேலிய அணிக் காக டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். 44 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய மெக்கில் 208 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றாளர்களால் வைத்தியசாலைகள் நிரம்பினால்
# சுகாதாரத்துறை பாரிய நெருக்கடிகளை சந்திக்கும்

(கொழும்பு)

**கொரோனா தொற்றாளர்கள் மேலும் அதிகரித்து வைத்தியசாலைகள் நிரம்பினால் சுகாதார துறை பாரிய நெருக்கடிகளை சந்திக்கும் என கொரோனா தடுப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**



தற்போதைய கொரோனா நிலவரம் தொடர்பில் தகவல் வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பேசிய அவர்,


தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா தொற்றாளர்களை விட அதிக மானவர்கள் சமூகத்தில் இருக்கக் கூடும். அதனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு நபருக்கும் கொரோனா தொற்று ஏற்ப டுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின் றன.

இந்நிலையில், நாட்டு மக்களை பாதுகாப்பாக இரு க்குமாறும் கேட்டுக் கொள் கிறோம்.

இதேவேளை, நாட்டில் நாளாந்தம் செய்யப்படும் பி.சி.ஆர்.சோதனை அதிகரி க்கப்பட்டுள்ளது.

ஆனால் அதன் முடிவுகள் வர காலதாமதம் ஏற்படு வதனால், பி.சி.ஆர்.செய்யப் பட்டவர்கள் வீட்டில் இருந்து வெளியில் வராது பாதுகா ப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கிடையில், கொரோ னாத் தொற்றாளர்கள் மேலும் அதிகரித்து வைத்தியசாலை கள் நிரம்பினால் சுகாதார துறை பாரிய நெருக்கடி களை சந்திக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (நி-4)



முஸ்லிம் மக்கள் சார்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் ஆண்டுதோறும் நடத்தப்படும் 'இப்தார்' நோன்பு திறக்கும் நிகழ்வு இம்முறை கொரோனாக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு அமைய நேற்று முன்தினம் இடம்பெற்றது. அலரி மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## 20 ரயில் சேவைகள் உடனடியாக ரத்து

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருக்கும் , கொரோனா பரவலால்கொரோ னாத் தொற்று மேலும் பரவா மல் இருப்பதற்கான நடவடி க்கைகளை ரயில்வே திணை க்களமும் எடுத்துள்ளது. அத னடிப்படையில், இரவு தபால் சேவை உட்பட, 20 ரயில் சேவைகள் மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரையிலும் ரத்து செய்யப்பட்டுள்ளன. (நி-4)

## துறைமுக நகர சட்டமூலம் தொடர்பில் சபாநாயகர்



(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான உயர் நீதிம ன்றத்தின் நிலைப்பாடு நேற்று முன்தினம் தமக்கு கிடைத்துள்ளதாக சபாநா யகர் மகிந்த யாப்பா அபே வர்த்தன தெரிவித்தார்.

அதனை எதிர்வரும் 18 ஆம் திகதி பாராளுமன் றத்தில் சமர்ப்பிக்கவுள்ள தாகவும் தெரிவித்தார். (நி-4)

# ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய வேளை
# தமிழ் மக்கள் என்னை ஆதரித்தனர்

## பெருமைப்படும் பொன்சேகா

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளராக நான் களமிறங்கிய வேளை யில் வடக்கு -கிழக்கில் தமிழ் மக்கள் என்னை ஆதரித்த னர் என்றால் அவர்களுக்கு என்மீது இருந்த நம்பிக் கையே காரணமாகும்.

அதற்கு பெருமைப்பட வேண்டுமென எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா சபையில் தெரிவித்தார்.

கொவிட்-19 சவால்களு க்கு மத்தியில் நாட்டில் காண ப்படும் தற்போதைய நிலை மைகள் குறித்த நேற்று முன் தினம் புதன்கிழமை இடம் பெற்ற இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் கொரோனா பர வல் நிலைமைகள் குறித்து நாம் தொடர்ச்சியாக எச்சரி க்கை விடுத்தது வருகின் றோம். முதலில் எதிர்க்கட்சி தலைவர் இந்த நிலைமை களை சபையில் எடுத்துக் கூறினார். ஆனால் அப்போது ஆளும் கட்சியினர் சிரித்துக் கொண்டனர்.

இப்போது நிலைமை என் னவாகியுள்ளது என்பது சகல ருக்கும் தெரிந்திருக்கும். 700 க்கும் அதிகமான மக் கள் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டினை முடக்குவது குறித்தும், தடுப்பூசி ஏற்றுவது குறித்தும் பேசிய வேளை யில் நகைப்பிற்கு எடுத்துக் கொண்டனர்.

மருத்துவ நடவடிக்கை களைமுன்னெடுக்காது, பாணி பருக்குவது குறித்தும், மூட நம்பிக்கைகளில் முட்டிகளை ஆற்றில் போடும் நடவடிக் கைகளை எடுத்தனர்.

ஆனால் இன்று ஜனாதி பதியும் ஆளும் கட்சியினரும் தடுப்பூசி குறித்து பேசுகி ன்றனர். இப்போதாவது இந்த உண்மைகளை விள ங்கிக்கொண்டமை நல்ல விடயமென்றே கருதுகின் றேன்.

மேலும் கொவிட் நிலை மைகளில் இராணுவத்தின் பங்களிப்பை நான் எப்போ தும் விமர்சித்ததில்லை. அவர்களின் ஒத்துழைப்புகள் அவசியம். அதேபோல் நாட் டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது என்றால் அத ற்கு பிரதான காரணம் நாம் கடன்காரராக மாறியமை யேயாகும்.

சீனாவிடம் அளவுக்கு அதி கமான கடன்களை பெற்றுக் கொண்டு அதனை கட்டமு டியாத நிலைமை உருவாகி யுள்ளது. அதேபோல் தேசிய பாதுகாப்பு என்பது மக்களை ஏமாற்றுவதல்ல, உணர் வுடன் அதனை கையாள வேண்டும்.

ஆனால் இந்த அரசாங் கம் தேசிய பாதுகாப்பு குறி த்து கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. உயி ர்த்த ஞாயிறு தாக்குதலில் நௌபர் மௌலவி மீது சும த்தி தப்பித்துக்கொள்ள நினை க்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடை க்கவில்லை. அதேபோல் தாக்குதல் குறித்த உண் மையான குற்றவாளிகளை கண்டறியாது, எம்மை அடக் கவே நினைக்கின்றனர்.

இராணுவம் என்பதற் காக, யுத்தம் செய்தமை க்காக கொலைகளை செய்ய முடியாது. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் கொலையாளியான சுனில் ரத்நாயக்கவினை நியாயப் படுத்தி அமைச்சர் வீரசேகர சபையில் பேசுகின்றார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்பதற்காக எத னையும் கூறிவிட முடியாது. வீரசேகரவிற்கு வேலை பெற் றுக்கொடுத்ததும், அவருக் கான பாதுகாப்பை கொடுத்த வன் நான். அந்த நன்றியை மறந்து இன்று எம்மை குற்ற வாளியாக்குகின்றனர். அதே போல் தமிழ் மக்கள் எனக்கு வாக்களித்ததில் என்ன தவறு ள்ளது.

யுத்தத்தை சரியாக செய்த காரணத்தினால், என்மீது நம்பிக்கை வைத்ததால், தமிழ் மக்கள் இராணுவ த்தை வெறுக்காத காரணத்தி னால் என்னை தமிழர்கள் ஆதரித்தனர். அதற்கு பெரு மைப்பட வேண்டும்.

மாறாக அவர்கள் செய் தது தவறென கூற முடியாது. நீதிமன்ற காரணிகளையே நான் சபையில் கூறினேன். அது விளங்காது முட்டாள் போன்று கதைக்கக்கூடாது எனப் பொன்சேகா தெரி வித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிதீவிர சிகிச்சைப் பிரிவை யாழ்.போதனாவில் விஸ்தரிக்குக

## சுகாதார அமைச்சரிடம் டக்ளஸ் வலியுறுத்து

(குப்பிழான்)

**கொரோனாத் தொற்றாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கத் தேவையான அதிதீவிர சிகிச்சைப் பிரிவை யாழில் விஸ்தரிக்குமாறு சுகாதார அமைச்சரிடம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.**

நாடளாவிய ரீதியில் கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில் வடக்கு மாகாணத்தின் பிரதான வைத்தியசாலையாக விளங்கும் யாழ்.போதனா வைத்தியசாலையில் கொரோனா நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு அதிதீவிர சிகிச்சைக் கட்டில்கள் நான்கு மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கொரோனாவின் தாக்கம் அதிகரிக்குமாயின் அதனை எதிர்கொள்வதற்கு குறைந்தபட்சம் 20 அதிதீவிரச் சிகிச்சைக் கட்டில்களும் அவற்றிற்கான உபகரணங்களும் உடனடியாகத் தேவைப்படுவதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீபவானந்தராஜாவினால் கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

அதேபோன்று, தற்போது காணப்படுகின்ற ஒட்சிசன் பிறப்பாக்கி வைத்தியசாலைக்கு தேவையான ஒட்சிசனை உற்பத்தி செய்வதற்குப் போதுமானதல்ல என்பதுடன் கடந்த ஐந்து வருடங்களாகத் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருகின்றமையினால் உற்பத்தித் திறனும் குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக வைத்தியசாலைக்குத் தேவையான மேலதிக ஒட்சிசன் தற்போது தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைகளில் இருந்தே பெற்றுக் கொள்ளப்படுகின்றது என்பதையும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் செயற்பாடுகளுக்கு பொருத்தமான உற்பத்தித் திறனுடைய ஒட்சிசன் பிறப்பாக்கி ஒன்றினையும் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

குறித்த விடயங்கள் தொடர்பாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட சுகாதார அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடித் தேவையான நடவடிக்கைகளுக்கு அறிவுறுத்துவதாகத் தெரிவித்துள்ளார். (5-4-18)

## ஆக்கம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பண்டிதர் பொன்.சுகந்தனின் தந்தையான அமரர். ச.பொன்னம்பலத்தின் ஞாபகார்த்தமாக பொற்சுடர் மலர் வெளிவரவுள்ளது.

மாற்றுத்திறனாளி பிள்ளைகளின் ஆளுமைகளை வெளிகொணரும் பொருட்டு அவர்களின் கவிதை, பாடல்கள் இம்மலரில் இடம் பெறவுள்ள. ஆக்கங்கள் 10 வரிகளுக்கு மேற்படாமலும் சமூக சிந்தனையோடும் அமைதல் வேண்டும். ஆக்கங்கள் யாவும் 18.05.2021 இற்கு முன்பாக "பொற்சுடர்" பொலிகண்டி கிழக்கு வல்வெட்டித்துறை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (5-4)

## உரிமை கோரவும்

(யாழ்ப்பாணம்)

ஜே/121 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட கொக்குவில் கிழக்கு நந்தாவில் பகுதியில் உள்ள விவசாய காணியில் புகுந்த கட்டாக்காலி மாடு ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது.

ஆனால்இதுவரை உரிமை கோரப்படவில்லை. எனவே குறித்த கால்நடையின் உரிமையாளர்கள் விரைவில் அதனை பொறுப்பேர்க்குமாறு கொக்குவில் கிழக்கு கமக்கார அமைப்பின் செயலாளர் தே.பராசக்தி அறிவித்துள்ளார். (5-4)

## க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள்

**கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்**

கணிதப்பிரிவு

எஸ்.வைஷ்ணவி-3ஏ, எஸ்.சிவானுஜன்-2ஏபி, ஜே.அறிவரசன்-ஏ2பி, எஸ்.குணாளினி-2ஏசி, ஜே.வசிதன்-2ஏபி, ஏ.கர்ணன்-ஏ2பி, எஸ்.ஜென்சிலி-2ஏபி.

உயிரியல் பிரிவு

எஸ்.கௌதமன்-2ஏபி, எம்.பலராம்-2ஏபி, ஜே.லியன்சியா-ஏ2பி, எஸ்.இசைவாணி-3பி

பௌதீக விஞ்ஞானப் பிரிவு

ஜே.தினோஜன் - 2ஏபி.

**யா/மல்லாகம் மகாவித்தியாலயம்**

கலைப்பிரிவு

க.துர்ஷிகா-3ஏ, உ.அபிதா-2ஏபி, கு.கஜானி-2ஏசி, கு.கஜானனி-2ஏசி, சி.சஞ்ஜீவ்-2ஏபி.

**புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி**

பௌதீக விஞ்ஞான பிரிவு

எஸ்.கஜனிகா-2ஏபி.

பொறியியல் தொழில்நுட்பப்பிரிவு

வை.சுகந்தன்-2ஏபி.

கலைப்பிரிவு

ஆர்.பிரதாபன்-ஏ2பி, வி.நிரோஷன்-2ஏபி, எஸ்.சண்முகப்பிரியா-2ஏபி, ஜே.சுஜீவா-ஏ2பி.

**அச்சுவேலி மத்திய கல்லூரி**

உயிரியல் பிரிவு

தி.மாதுரி-2ஏபி, ஜெ.வைஸ்ணவி-3பி.

கணிதப்பிரிவு

சி.விதுசன்-2ஏசி.

கலைப்பிரிவு

க.திவ்வியா-2ஏபி.

**இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்**

கலைப்பிரிவு

பா.நிரஞ்சனா-3ஏ, உ.பிரியங்கா-2ஏபி, றெ.றெஜினோல்ட்-ஏ2பி, ச.அனோசன்-ஏ2பி.

**யா/விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி**

கலைப்பிரிவு

வை.வேணுஜன்-3ஏ, பி.ரம்மியா-3ஏ, ஆர்.டிலக்ஷனா-3ஏ, எஸ்.கீர்த்தனா-2ஏபி, ஆர்.சாமந்தி-2ஏபி.

விஞ்ஞானப்பிரிவு

கே.தேசிகன்-2ஏபி.

**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

கணிதப் பிரிவு

ச.தாமிரவரன்-3ஏ, தெ.சுஜிஜேந்திரன்-2ஏபி, க.நிஷாந்தினி-2ஏபி, து.லக்ஷன்-2ஏசி, சி.குயின்சிகா-ஏ2பி, ச.லக்ஷன்-3பி.

உயிரியல் பிரிவு

ம.துஷாரா-2ஏபி, ஜ.நிறோசன்-3பி.

தொழில்நுட்பப் பிரிவு

க.அர்ச்சிகா-ஏ2பி, சி.சயனி-ஏபிசி, க.நயுத்திரன்-2பிசி.

வர்த்தகப் பிரிவு

அ.யசிநந்தா-3ஏ, பா.திஷானா-2ஏபி, ச.விதுசன்-ஏபிசி, வ.விந்துஷா-ஏ2பி, கி.பங்கயன்-ஏ2பி, செ.வரலக்ஷன்-2பிசி, ந.மதுசங்கா-3பி.

கலைப் பிரிவு

சி.அனிஸ்ரிகா-3ஏ, செ.நிதுஷா-3ஏ, ர.பிரியங்கா-3ஏ, ந.விதுர்ஷிகா-3ஏ, சு.தேனுஜா-3ஏ, சு.கோஷிகா-3ஏ, அ.விதுஜா-2ஏபி, சி.லக்சியா-2ஏபி, த.இசையரசி-2ஏசி, ச.ஹெறீனா-ஏ2பி, யோ.திவ்யா-ஏ2பி, ச.கீர்த்தனா-ஏ2பி, க.தீபிகன்-2ஏசி, பே.கம்ஷத்வனி-2ஏபி, ச.சிந்துஜா-ஏ2பி, மோ.பிரிந்தா-2ஏசி

**மு/மல்லாவி மத்திய கல்லூரி**

வர்த்தகப் பிரிவு

பி.சங்கவி-3ஏ, ரி.சங்கீதா-ஏ2பி.

கலைப்பிரிவு

எஸ்.பேபிகா-3ஏ, ரி.டிலக்ஷினி-2ஏபி, கே.அலெக்சன்-2ஏபி, என்.நிஷாந்தினி-2ஏபி.

**யா/வட்டு இந்துக் கல்லூரி சித்தன்கேணி**

கணிதப்பிரிவு

பி.புவித்திரா - 2ஏசி, ரி.அக்ஷியா-2ஏபி, ஜே.சாரங்கன்-2ஏபி, ஆர்.மிதிலா-2ஏபி, எஸ்.சிவகஜன்-2ஏபி.


உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்

யூ.பிரியங்கன்-ஏ2பி, எஸ்.சிவரூபன்-3பி, ஜே.கனிஸ்ரா-3பி.

கலைப்பிரிவு

ஜே.கஜலரசி-ஏ2பி, ஆர்.சோபா-ஏ2பி. (5-104-60-27)

## சவுக்கங்காட்டில் தீ; 20 ஏக்கர் காடு நாசம்



(கரணவாய்)

மணற்காடு சவுக்கங்காட்டில் ஏற்பட்ட பாரிய தீயால் சுமார் 20 ஏக்கர் சவுக்கங்காடு எரிந்து அழிந்துள்ளது. இச் சம்பவம் நேற்று முன்தினம் புதன் கிழமை அதிகாலை ஏற்பட்டிருப்பினும் பிற்பகல் அளவிலேயே மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற்றும் விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் இணைந்து மாலையில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். தீப்பரவல் காரணமாக சுமார் 20 ஏக்கர் சவுக்கங்காடு எரிந்து அழிவடைந்துள்ளது. (5-4-33-60)

## தென்மராட்சி பிரதேச செயலகத்தின் சில பகுதிகள் முடக்கம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சிலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவு உள்ளிட்ட சில பிரிவுகள் முற்றாக முடக்கப்பட்டு, பொதுமக்கள் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் புதன் கிழமை தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஐவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதுடன் அதற்கு முன்னரும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சிலர் தொற்றுக்கு இலக்காகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PEOPLE'S BANK

# தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.01.2020 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 22.05.2021 (சனிக்கிழமை). 23.05.2021 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | ஏலவிற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ் ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) | 21.05.2021 | 22.05.2021 (சனிக்கிழமை) 23.05.2021 (ஞாயிற்றுக்கிழமை) யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| | மானிப்பாய் | | |
| தெல்லிப்பளை | மல்லாகம் | | |
| | காங்கேசன்துறை | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காற்றுறை | — | | |
| நெல்லியடி | — | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | — | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திபோடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**உதவிப் பொது முகாமையாளர்(பதில்),**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல: 021 222 2601/ 021 222 8602**
**தொலை நகல்: 021 222 2602**
**ஈ.மெயில்:** jafrho@peoplesbank.lk (c - 2105)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982இந்து நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா:- செவ் 6 சூரி 4 ல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: **O/L**.பிரான்ஸ் **PR** உண்டு
எதிர்பார்ப்பு:சாதரணபடித்த பெண், வெளி நாடும் பார்க்கலாம்
தொ.இ: **B**/11872

பிறப்பு:1980 இந்து நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 24 ¾செவ் 3 சூரி 2 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:**A/L.** பல்பொருள் வாணிபம்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண். உள் நாடு மட்டும்
தொ.இ: **B**/11873

பிறப்பு:1985இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா:31 செவ் 11 சூரி 10 ல்
தகைமை/தொழில்:**Q.S,** அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: படித்த பெண். உள்நாடு மட்டும்
தொ.இ: **B**/11875

பிறப்பு:1991 இந்து நட்சத்திரம்: பூராடம்
கி.பா: - செவ்.சூரி9ல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்:**A/L,ETC (U.K)**
எதிர்பார்ப்பு:ஐரோப்பிய நாடு விரும்பத்தக்கது.
தொ.இ: **B**/1876

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 31 ¾செவ் 12சூரி8 ல் உயரம்:5'2"
தகைமை/தொழில்: **MBBS Doctor**
எதிர்பார்ப்பு:தகுந்தவரன்.உள்நாடு மட்டும்
தொ.இ:**G**/4419

பிறப்பு:1986இந்து நட்சத்திரம்:விசாகம்
கி.பா:67செவ் 8 சூரி11 ல் உயரம்:5'5"
தகைமை/தொழில்:**BA,** அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரச.தனியார் தொழில், வெளி நாடும் விரும்பத்தக்கது.
தொ.இ:**G**/4472

பிறப்பு:1982இந்து நட்சத்திரம்: மகம்
கி.பா:34 செவ்1 சூரி10 ல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: **BSc,MSc**
எதிர்பார்ப்பு:இறைவரித்திணைக்களம், வெளிநாடும் விரும்பத்தக்கது.
தொ.இ:**G**/4485

பிறப்பு: 1983இந்து நட்சத்திரம்:விசாகம்
கி.பா: 40 ½ செவ்.சூரில்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: BBA, கணக்காளர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி.தொழில்புரிபவராகவும் இருத்தல் நன்று. வெளிநாடும் பார்க்கலாம்
தொ.இ:**G**/4512

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையில் கல்வி கற்று 2020 இல் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் 3A பெறுபேற்றைப் பெற்று (மாவட்ட நிலை -31) பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவி

**பிரியங்கா ஸ்ரீபன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவருக்குக் கல்வி கற்பித்த அனைத்து ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.
மேலும் A,2B பெறுபேற்றைப் பெற்ற மாணவி **எக்ஸிபா பாலச்சந்திரனையும்** (மாவட்ட நிலை -180) பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/புனித சாள்ஸ் ம.வி. யாழ்ப்பாணம்.** (660)

# முழுநேர சமையல் ஆள் தேவை

1. அனுபவமுள்ள முழுநேர பெண் சமையல் ஆள் தேவை.
2. வயது 30-50 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. நல்ல உடல் ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. தங்குமிட வசதி, முழுநேர உணவு இலவசமாக வழங்கப்ப்டும்.
5. அனுபவமுள்ளவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**தாங்கம்மா முதியோர் இல்லம்,**
**புதுகுளம்,**
**கனகராயன் குளம்.** (இ)

**தொடர்புக்கு: Dr.குணசிங்கம்**
**076 248 2766**

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-23, நாச்சிமார் கோவில் வீதி, ஆதன இலக்கம் 76/49 என்ற ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் நன்னி சின்னவன் என ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் கலட்டி இராமநாதன் வீதி, இலக்கம் 34/13 இல் வசிக்கும் சின்னர் துரையும் பெண் பத்மாவதியும் பிரசித்த நொத்தாரிசு பாலசுப்பிரமணியம் தனபாலன் முகதாவில் நிறைவேறிய 1096 ம் இலக்க 1991.12.02 ஆம் திகதிய நன்கொடை உறுதியில் சின்னர் துரை மகன் தேவராசாவிற்கு தமது சீவிய உரித்திற்கமைவாக வழங்குகின்றனர். குறித்த 1096ம் இலக்க நன்கொடை உறுதியில் "இவ்வாதனம் எங்களின் 1ம் பேரின் பெயரில் நொத்தாரிசு அருளம்பலம் முகதாவில் (கோண்டாவில்) நிறைவேறிய நன்கொடை உறுதியால் 1ம்பேரின் நன்கொடையும் சொந்தமும் ஆட்சியுமானதும் மேலும் 1ம், 2ம் பேரின் பெயரில் நொத்தாரிசு எஸ்.சிதம்பரநாதன் முகதாவில் நிறைவேறிய அறுதி உறுதியினால் எமது கொள்வனவும் சொந்தமும், ஆட்சியுமானதும் எமது நீண்ட கால தடையற்ற ஆட்சிக்குட்பட்ட ஆதனமாகும்" என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தாயுறுதி இலக்கம் குறிப்பிடவில்லை.

மேலும் யாழ்ப்பாணம் இராமநாதன் வீதி, இல 76/49ஐச் சேர்ந்த சின்னர் துரைதேவராசா பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் நிறைவேறிய 10303ம் இலக்க 2019.02.07ம் திகதிய நன்கொடை உறுதியில் தனது சீவிய உரித்திற்கமைவாக தேவராசா மகள் நிரோஷிக்கு வழங்குகின்றார்.

ஆதன விபரம்: வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று யாழ் மாநகரசபை நல்லூர் பிரதேச செயலகம் கிராம அலுவலர் பிரிவு J/100, வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "முல்லைக்கட்டையடியும் மறுவும்" உறுதிப்படி விஸ்தீரணம் நிலபரப்பு 1 குளி 17 ம், இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.தங்கராஜா அவர்கள் 2018.11.22ஆம் திகதி தயாரித்த 10392ம் இலக்கப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டியபடியும் ஆட்சியும் படியும் விஸ்தீரணம் நிலப்பரப்பு(1) ஒன்றும் குளி (5.19) ஐந்து தசம் ஒன்று ஒன்பதும், வீடும், கிணறும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும் இதன் எல்லை.

கிழக்கு:- விக்கினேஸ்வரன் சிவானந்தனின் ஆதனம்.
வடக்கு:- பத்து அடி (10') அகலமான பாதை.
மேற்கு:- றோட்டு (இது சேர் பொன். இராமநர்தன் வீதிக்கும் கற்பக விநாயகர் கோவிலுக்கும் செல்லும் றோட்)
தெற்கு:- நடராஜா குயின்சனுக்கு உரிய ஆதனமும் கார்த்தலிங்கம் தவமலரின் ஆதனமும் ஈஸ்வரன் சியாமளாதேவிக்குரிய ஆதனமும் இதடங்கலும்.

தற்போது தேவராசா நிரோஷி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது தேவராசா நிரோஷி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விஸ்வலிங்கம் மணிவண்ணன்,
கௌரவ முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
(c - 2110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா மாவட்ட பதிப்பாளர் கூட்டுறவுசங்கத்தினால் "வாழ்வித்து வாழ்வளிப்போம்" எனும் தொனிப்பொருளில் குருதிதான முகாம் நேற்று இடம்பெற்றது. வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. (படம்:- சதீஸ்)

# கடற்கரையில் மணல் அகழ்வு கடல்நீர் உட்புகும் அபாயம்

(அக்கராயன்)

**முல்லைத்தீவு கடற்கரையினை அண்மித்த பகுதிகளில் தொடர்கின்ற மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



சிலாவத்தை மேற்கு. உப்புமாவெளிப் பகுதிகளில் தொடர்கின்ற மணல் அகழ்வினால் கடல் நீர் உட்புகும் அபாயம் எழுந்துள்ளது.

இயற்கையான மண் மேடுகள் அழிக்கப்பட்டு தென்னைகள் நடுகை செய்வதற்கென காரணம் கூறப்பட்டு பெருமளவு மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

இது தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் மணல் அகழ்வை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்தது.

தற்போது இம் மணல் மேடுகள் அழிக்கப்பட்டு நிலம் சமப்படுத்தப்படுவதன் காரணமாக கடல் கொந்தளிப்புகளின் போது முல்லைத்தீவு- திருகோணமலை வீதிக்கு கடல் நீர் பரவக் கூடிய அபாயம் தற்போது காணப்படுகிறது.

பொதுமக்களினால் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் சிலாவத்தை மேற்கு. உப்புமாவெளிகளில் மணல் அகழ்வு தொடர்கின்றது. மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-350)

## பொலிஸ் உத்தியோகத்தருக்கு கொரோனா; தொடர்புபட்டோருக்கு பி.சி.ஆர்.

(நெளுக்குளம்)

வவுனியா பொலிஸ் நிலைய பெண் உத்தியோகத்தருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் குறித்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஹெப்ரிக்கொல்லாவை பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டிற்கு விடுமுறையில் சென்று மீண்டும் கடமைக்கு திரும்பிய நிலையில் அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதில் அவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதனையடுத்து வவுனியா பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் சிலருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (5-4-299)

## யானைத் தொல்லையை கட்டுப்படுத்த கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெருமாள்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அதி. கரித்துள்ள யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கராயனில் இருந்து அம்பலப்பெருமாள்குளம் செல்லும் வீதியில் தேக்குக் காட்டுப் பகுதியில் மாலை 4 மணிக்குப் பின்னர் யானைகள் வீதிக்கு வருவதாகவும் மக்கள் போக்குவரத்தில் ஈடுபட முடியாது உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடந்த பல மாதங்களாக அம்பலப்பெருமாள்குளத்தின் வழியாக நீந்தி வரும் யானைகள் பயன்தரும் நெற்பயிர்களை அழித்து வருகின்றன.

யானைகள் அச்சுறுத்தலாக மாறி உள்ளன. யானைகள் வீதிகளைக் கடக்கின்ற பகுதிகளில் சூரிய மின்கல வெளிச்சம் பொருத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பாக கிராமத்தின் முக்கிய இடங்களில் சூரிய மின்கல வெளிச்சங்களை ஏற்படுத்த வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (5-4-350)

## ஸார்ப் நிறுவனத்தால் இதுவரை 27,568 வெடிபொருட்கள் மீட்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு அம்பகாமம், தச்சடம்பன் மற்றும் கிளிநொச்சி, முகமாலை, ஆனையிறவு ஆகிய பிரதேசங்களில் இதுவரை 16 இலட்சத்து 30 ஆயிரத்து 204 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 27 ஆயிரத்து 568 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் நிறுவனம் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2021 ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் 16 இலட்சத்து 36 ஆயிரத்து 204 சதுரமீற்றர் பரப்பளவிலிருந்து 27 ஆயிரத்து 568 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-315)

## முல்லையில் வெளிச்ச வீடு அமைக்க கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவில் வெளிச்ச வீட்டினை அமைப்பதற்கு கடற்றொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் முல்லைத்தீவு வெளிச்ச வீடு அழிந்து விட்டது.

2010 ஆம் ஆண்டிலிருந்து முல்லைத்தீவில் வெளிச்ச வீடு அமைக்க வேண்டும் என கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக சகல தரப்பினருக்கும் வெளிச்ச வீடு அமைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் இதுவரை வெளிச்ச வீடு அமைக்கப்படவில்லை. தற்போதைய கடற்றொழில் அமைச்சரிடம் வெளிச்ச வீட்டினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போது வெளிச்ச வீடு இல்லாமையால் கடலுக்குச் செல்லும் தொழிலாளர்கள் கரைக்குத் திரும்புவதில் இடர்களை எதிர்நோக்குகின்றனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் வெளிச்ச வீடு அமைப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில் விரைவில் வெளிச்ச வீட்டினை முல்லைத்தீவில் அமைக்க வேண்டும் என கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (5-4-350)



க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் (2020) தொழில்நுட்பப் பாடப்பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடத்தை பெற்ற கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவன் விமலரட்ணம் தமிழ்மாறனுக்கு கிளிநொச்சி நியூ லலிதா நகைமாளிகையினர் மோதிரம் வழங்கி தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். (படம்:- சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

07.05.2021
சித்திரை 24, வெள்ளிக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 6.44 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 3.31 மணிவரை
சுபநேரம் 5.55-7.25 மணிவரை
இராகுகாலம் 10.25-11.55 மணிவரை
சந்திராஷ்டமம்: ஆயிலியம்,மகம்
ஏகாதசி விரதம் வளவன்

**மேஷம்** — தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், வழக்கத்தை விடக் கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** — அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்** — குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** — சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வேலைச்சுமை கூடினாலும் பலன் கிடைக்கும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்** — நட்பொன்று பகையாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**கன்னி** — சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**துலாம்** — தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், உற்சாகமான நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** — மகிழ்ச்சி கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**தனுசு** — மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்** — சகோதர வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**கும்பம்** — ஆரோக்கியத்தில் இருந்த குறைகள் அகலும், கோரிக்கைகள் நிறைவேறும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** — திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே முன்கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

மற்றவர்களை சந்தோசப்படுத்துபவனே உண்மையில் சந்தோசப்படுகிறான்

# மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்த முடியாது

## அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தலினை விரைவில் நடத்தாதிருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற ஆளும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பரவி வரும் தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சிறந்த விடயமல்லவென இதன்போது ஆளுந்தரப்பின் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் தேர்தலொன்றை நடத்துவதில் பல்வேறு சிக்கல் நிலைமைகள் காணப்படுவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.(நி-4)

## வர்த்தமானிக்கு எதிரான மனு ஒத்திவைப்பு

(கொழும்பு)

தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாயாக நிர்ணயம் செய்து வெளியிடப்பட்டுள்ள அதி விஷேட வர்த்தமானிக்கு எதிராக, பெருந்தோட்ட கம்பனிகள் தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணைகளை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை ஒத்தி வைக்க மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்மானித்தது. (நி-4)

## 15 மூடை மஞ்சளுடன் இருவர் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பெரியவெங்காய விதை மற்றும் உலர் மஞ்சள் தொகையுடன் இரண்டு பேர் நீர்கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து பெரியவெங்காய விதைகள் அடங்கிய 27 மூடைகளும் உலர் மஞ்சள் அடங்கிய 15 மூடைகளும் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறு பொருட்களை சட்டவிரோதமாக கொண்டு வருவதற்கு பயன்படுத்தப்பட்ட கப்பல்களும் கடற்படையினரால் மீட்கப்பட்டதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-4)

**தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தரும பரிபாலன சபை**
**Thumpalai Nellandai Amman Temple Board of Trustees**

தும்பளை Thumpalai | பதிவு இல. No: HA/5/JA/419 ஸ்தாபிதம் Estd:31.05.1945 | பருத்தித்துறை Point Pedro

## வருடாந்த வெளிமடை உற்சவ அறிவித்தல்

தற்பொழுது நாட்டில் தீவிரமடைந்துள்ள கொரோனாத்தொற்று நிலையைக் கருத்திற் கொண்டும் பொதுச்சுகாதாரம் தொடர்பாக அரச மற்றும் பிராந்திய பொதுச்சுகாதாரப் பகுதியினரின் அறிவித்தலுக்கமைய **07.05.2021, 14.05.2021 மற்றும் 15.05.2021** ஆகிய திகதிகளில் நிகழ தீர்மானிக்கப்பட்ட வருடாந்த வெளிமடை உற்சவ நிகழ்வின் விளக்கு வைப்பு மற்றும் வெளிமடைப் பொங்கல் நிகழ்வு என்பன பக்தர்களை கோயில் பரப்பில் உள்வாங்கி வழமைபோன்று நிகழ்த்துவது சாத்தியமானதாக இருக்க வாய்ப்பில்லை என ஆலய தருமபரிபாலன சபையினரும் ஆலயக் குருக்களும் தீர்மானித் துள்ளனர். எனவே மேற்குறித்த தீர்மான ஒழுங்கில் செயற்படுவது யாவருக்கும் சிறப்பு என வலியுறுத்திக் கூறுவதுடன் பின்வரும் ஒழுங்கு விதிகளை சகலரும் பின்பற்றிக்கொள்ளுமாறு விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

❖ அடியார்களின் நேர்த்தி நிகழ்வுகளான காவடி எடுத்தல், பாற்செம்பு எடுத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், அங்கப் பிரதட்சணை செய்தல், ஆடு, கோழி கட்டுதல், பொங்கல் இடுதல் என்பவற்றைத் தவிர்த்துக்கொள்ள வேண்டப்படுகின்றீர்கள்.

❖ ஆலயச் சூழலில் எவ்வித வியாபார நடவடிக்கைகளையும் தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

❖ அடியவர்கள் யாவரும் தீர்மான ஒழுங்கு விதிகளுக்கமைய ஒழுகி ஆலயத்தின் மேன்மை மற்றும் கீர்த்தியை நிலைபெறச் செய்யவேண்டும் என்பதனைத் தாழ்மையுடன் தெரிவிப்பதுடன் மேற்படி தீர்மான ஒழுங்கிற்கு விதிவிலக்காக தொழிற்படும் அடியார்கள் மற்றும் எவரும் தொடர்பாக ஆலய தருமபரிபாலன சபையினர் எவ்விதத்திலும் பொறுப்பாகமாட்டார்கள் என்பதனை தாழ்மையுடன் வெளிப்படுத்துகின்றோம்.

**குறிப்பு: 16.05.2021 ஞாயிற்றுக்கிழமை நடைபெறத் தீர்மானிக்கப்பட்ட தும்பளை நெல்லண்டை அம்மன் தருமபரிபாலன சபையினரின் வருடாந்த பொதுக்கூட்டம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.**

**தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில், தருமபரிபாலன சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கனவுகள் பலிக்கும்

சேனாதிபதி மந்திரவாதியிடம், தங்களை ஒழிக்க காளி பூஜை செய்யச் சொன்னான். இப்போது அந்த மந்திரவாதி தங்கள் பெயரைச் சொல்லியவாறே மயானத்தில் பூஜை செய்து கொண்டிருக்கிறான். நீங்களே வந்து பாருங்கள்," என்றான்.

மன்னன் முதலில் அதை நம்பவில்லை. ஆனால், மல்லப்பன் வற்புறுத்தியதன் பேரில் அவனோடு சென்றான். அங்கு மந்திரவாதி காளி பூஜை செய்வதையும், மந்திரங்களிடையே தன்னுடைய பெயரைப் பல தடவைகள் கூறுவதையும் கேட்டான். உடனே அவன் அரண்மனைக்கு வந்து சேனாதிபதியைக் கைது செய்து சிறையில் அடைக்கும்படி கட்டளை இட்டான். சேனாதிபதியும் சிறையில் அடைக்கப்பட்டான்.

மன்னன் மந்திரியிடம், "நான் பார்த்த இந்தக் கனவும் பலிக்குமோ என்ற பயம் இருந்தது. நல்லவேளையாக இந்த மல்லப்பன்தான் சேனாபதியைக் கண்டு பிடித்துச் சொன்னான். தக்க சமயத்தில் போய் அவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்தேன்," என்றான்.

மந்திரி அப்போதும் எதுவும் பேசவில்லை. என்ன சொன்னாலும் மன்னர் கேட்கமாட்டார் என்பது அவனுக்குத் தெரிந்ததே.



இது மல்லப்பன் சூழ்ச்சி என உணர்ந்த மந்திரி அவனை அழைத்து, "மல்லப்பா! ஆரம்பித்து விட்டாயா உன் வேலையை.

உன்னை முதல் தடவை எச்சரித்தேன். அதை நீலட்சியம் செய்யவில்லையா?" என்று கேட்டான்.

மல்லப்பனும் கர்வமாக, "உங்கள் எச்சரிக்கையை குப்பையில் போடுங்கள். என்னால் உங்களைக் கூட சிறையில் அடைக்க முடியும். மன்னர் நான் சொல்வதை நம்பி விடுவார்," என்றான்.

இதற்குச் சில நாட்களுக்குப் பின் மன்னன் ஒரு கனவு கண்டான். அதில் மல்லப்பன் தன் எதிரியான ஒரு மன்னனோடு சேர்ந்து சதி செய்து தன்னைக் கொல்வது போல அவர் கண்டான். உடனே அவர் கண்விழித்துக் கொண்டு மல்லப்பனைக் பிடித்து சிறையில் அடைக்குமாறு கட்டளை இட்டான். இதை அறிந்த மல்லப்பன் பயந்து ஓடிவிட்டான். (தொடரும்)

# மகாபாரதம்

விராட மன்னன் கங்கருடன் சூதாடிக்கொண்டிருந்த போது "பீஷ்மர் முதலானோரை வென்ற என் மகன் போல் உம்மை நான் வெல்வேன்" என்றான்.

ஆனால் அதற்கு கங்கர் "பிருகன்னளையின் உதவியால்தான் உன் மகனுக்கு வெற்றி கிடைத்திருக்க வேண்டும்" என்றார்.

இதனால் கோபம் கொண்ட விராடன் கையில் இருந்த பகடையை கங்கர் மீது வீசினான்.

அவர் நெற்றியிலும் வலது காதிலும் பட்டு இரத்தம் கொட்டிற்று. அருகில் இருந்த சைரந்தரி பதறி தன் மேலாடையால் அந்த இரத்தத்தைத் துடைத்து அதனைப் பிழிந்து ஒரு பாத்திரத்தில் ஏந்தினாள்.






அச்செயல் மன்னனுக்கு அருவருப்பை ஏற்படுத்த உடன் சைரந்தரி "இவர் ஒரு மகான். இவர் இரத்தம் பூமியில் பட்டால் மழை பொழியாது. உனக்குக் கேடு வரும்" என்றாள்.

இந்நிலையில் உத்தரனும் பிருகன்னளையும் வர "உத்தரன் மட்டும் [illegible] கங்கர்? உள்ளே வந்த உத்தரன் கங்கரைக் கண்டான்.

நெற்றியில் இருந்த காயத்தைப் பார்த்து "இந்த கொடுமையை இழைத்தது யார்? என்றான். மன்னன் அலட்சியமாக அது தன்னால் நேர்ந்தது என்றான்.

அவரின் காலில் விழுந்து மன்னனை மன்னிப்புக் கேட்கச் சொன்னான் உத்தரன். பின் அவர்கள் யார் என்பதைக் கூறினான்.

பெரு மகிழ்ச்சியுற்ற மன்னன் தன்னை மன்னிக்குமாறு கூறினான். "என் நாட்டையே உங்களுக்குத் தருகிறேன்" என்றான். அருச்சுனனை நோக்கி "மாவீரனே என் மகளுக்கு ஆடலும் பாடலும் கற்பித்தவனே என் மகள் உத்தரையை உனக்குத் தர விரும்புகிறேன்" என்றான்.

உடன் அருச்சுனன் "மன்னா ஓராண்டு காலம் உம் மகளை என் மகளாகவே நினைத்தேன். அந்த மனநிலையை என்னால் மாற்றிக் கொள்ள முடியாது. ஆகவே என் மகன் அபிமன்யுவிற்கு அவளை மணம் செய்வியுங்கள்" என்றான். மன்னனும் ஒப்புக் கொண்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் மேற்பார்வையாளர் சேவைக்கு உள்வாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் -2021

வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக உரிய தகைமைகளைக் கொண்ட வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் நிரந்தர சேவையில் உள்ள அட்டவணைப்படுத்தப்படாத பதவியணியினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி இல | பதவிப்பெயர் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | வேலை/வெளிக்கள மேற்பார்வையாளர் | 01 |
| 02 | சுகாதார மேற்பார்வையாளர் | 01 |
| 03 | சந்தை மேற்பார்வையாளர் | 01 |

**02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள்**

2.1. 01.01.2013 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட மேற்பார்வையாளர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பிற் கமைவாகவும், கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டு 11.07.2019 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சேவைப்பிரமாணக்குறிப்பின் திருத்தங்களுக்கு அமைவாகவும் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

2.2. இப்பதவி ஒரு வருட தகுதிகாண் காலத்தைக்கொண்டதும் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும்.

2.3. விதவைகள்/அநாதைகள்/தபுதாரர்கள் பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

**03. அடிப்படைத்தகைமைகள்**

3.1. விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலப்பகுதியில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும். (விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கேதுவாக வாக்காளர் இடாப்பின் பிரித்தெடுப்பு அல்லது கிராம அலுவலரால் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்)

3.2. நன்னடத்தை உடையவராகவும் தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

3.3. உள்வாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுவதனால் வயதெல்லை ஏற்புடையதாகாது.

3.4. 03/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக PL-1-2016 சம்பளக் குறியீட்டில் சம்பளத்தை பெறுபவராக இருத்தல் வேண்டும்.

3.5. பந்தி 3.4 இல் குறிப்பிடப்பட்ட ஏதாவது ஒரு நிரந்தர பதவியில் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் உடன் முந்திய 5 வருட காலப்பகுதியில் தொடர்ச்சியாக திருப்திகரமான 5 வருட சேவையினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அதுபற்றி திணைக்களத்தலைவர் / நிறுவனத்தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**04. கல்வித்தகைமை**

4.1. 01.01.2013 ஆம் திகதிக்குப் பின்னர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் நிரந்தர நியமனம் பெற்றவர்கள் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் (G.C.E.O/L) இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகளுடன் மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4.2. 01.01.2013 ஆம் திகதிக்கு முன்னர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் நிரந்தர நியமனம் பெற்றவர்கள் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் (G.C.E.O/L) அல்லது தேசிய கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் (N.C.G.E) இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**05. சம்பளஅளவுத்திட்டம்**

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 25.02.2016 ஆம் திகதிய 03/2016 இன் MN-1-2016 சம்பளத்தொகுதி இப்பதவிக்கு உரித்தாவதுடன் அதற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 27140-10X300-11X350-10X495-10X660-45540 ஆகும்.

**06. தெரிவு செய்யப்படும் முறை**

நேர்முகப் பரீட்சைக் குழுவினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் நேர்முகப் பரீட்சையில் கல்வித்தகைமைகள், மேலதிக தகைமைகள், வேலை தொடர்பான அறிவு, மனப்பாங்கும் நடத்தையும் என்பவற்றிற்கு புள்ளிகள் வழங்கப்படுவதுடன் நேர்முகத்தேர்வில் அவர்கள் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில் உயர் புள்ளி வரிசை ஒழுங்கில் நியமனத்திற்காக தெரிவு செய்யப்படுவர்.

**07. விண்ணப்பிக்கும் முறை**

7.1. வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் ரூபா 100.00 ஐ செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

7.2. விண்ணப்பத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7.3 விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்ற முகவரிக்கு 20.05.2021 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

7.4. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "மேற்பார்வையாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2021" எனக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கும் பதவியின் பெயரும் குறிப்பிடப்பட வேண்டும்.

7.5. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்திற்கு பின்னரோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் அல்லது இந்நியமனம் இரத்துச் செய்யப்படும்.

7.6. ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வோர் பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

திருமதி. சாரதா உருத்திரசம்பவன்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(c-2113)

# திருகோணமலையில் மேலும் ஒரு பகுதி முடக்கப்பட்டது

(திருமலை)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஆண்டான்குளம் சுபதலங்கர மாவத்த கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த பகுதியில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வீதிகளை மறித்து பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா பரவல் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் ஏற்கனவே பல கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுதப்பட்டுள்ளன.

இந்நிலையில், மக்கள் அவதானமாகவும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியும் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதாரத் தரப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (நி-4)

# வழக்கு விசாரணைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நடத்தாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 நிலைமை காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் சட்டத்தரணிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப அத்தியாவசியமான வழக்குகளை மாத்திரம் விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# பல்கலைக்கு தகுதி பெறாதவர்களுக்கு விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்காக தகுதி பெறாத மாணவர்களுக்கு விசேட வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

அவ்வாறான மாணவர்களின் தரவுகளை திறன் அபிவிருத்தி அமைச்சு கோரியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

தனியார் மற்றும் அரச துறைகளில் காணப்படும் பல்வேறு கற்கை நெறிகளில் இவர்களை ஈடுபடுத்துவதற்கான தரவுகள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கமைய பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகாத மாணவர்களின் தரவுகளை திறன் அபிவிருத்தி அமைச்சுக்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (நி-4)

# தேடுதல் பணியில் ட்ரோன்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுப் பரவலானது நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது.

இந்நிலையில் "தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் சுகாதார விதிமுறைகள் மீறப்படுகின்றனவா? என்பதைக் கண்டறிய ட்ரோன்களைப் பயன்படுத்தும் முயற்சியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். அந்த வகையில் இத்திட்டமானது நேற்று காலை பிங்கிரிய என்ற இடத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 50 கிராம உத்தியோகத்தர்களுக்கு கொரோனா

(கொழும்பு)

50 கிராம உத்தியோகத்தர்களுக்கு கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளதாக இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அதன் தலைவர் சுமித் கொடிகார இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மேலும் 100 கிராம உத்தியோகத்தர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும்அவர்தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியை வெற்றி கொள்ள இரு தரப்புகளும் ஒத்துழைக்க வேண்டும்

## – அத்துரலிய ரத்ன தேரர் –



(கொழும்பு)

**அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தற்போதைய நெருக்கடியான நிலைக்கு தீர்வு காண முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.**

ராஜகிரியவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக நாடு பாரிய நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளது. இந்திய நாட்டில் கொவிட் தாக்கத்தினால் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை இலங்கைக்கும் ஏற்படும் வாய்ப்பு அதிகம் காணப்படுவதாக சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை வெற்றி கொள்ள ஆளும் தரப்பினரும், எதிர்த்தரப்பினரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். ஆனால் இரு தரப்பினரும் பொறுப்புடன் செயற்படாமல் ஒரு தரப்பினர் பிறிதொரு தரப்பினரை தூற்றிக் கொள்கிறார்கள்.

அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கொவிட்-19 தாக்கத்தையும் அதனால் ஏற்பட்டுள்ள சவால்களையும் வெற்றி கொள்ள முடியாது. சுகாதார காரணிகளை முன்னிலைப்படுத்தி செயற்படுதல் அவசியமாகும். சுகாதார தரப்பினரது செயற்பாடுகளுக்கு அரசியல்வாதிகள் இடையூறு விளைவிப்பதாக அறிய முடிகிறது. இவ்வாறானவர்கள் குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை குறித்து அவதானம் செலுத்தாது பாராளுமன்றில் தேவையற்ற வாதப் பிரதிவாதங்கள் இடம்பெறுவது கவலைக்குரியது. ஆளும் தரப்பினரும், எதிர்த்தரப்பினரும் பொறுப்புடன் செயற்படுவது அவசியமாகும் என தேரர் தெரிவித்தார். (நி-4)

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய திருமண நிகழ்வு

## எம்.பியும் கலந்து கொண்டதால் சர்ச்சை

(கொழும்பு)

ஹொரண பகுதியில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறி நடத்தப்பட்ட ஒரு திருமண வைபவத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் எம்.பியான திஸ்ஸ அத்தநாயக்க கலந்து கொண்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவி வருகின்றது.

இது தொடர்பில் அவரிடம் விசாரித்த போது,

ஹொரணையில் உள்ள ஒரு மண்டபத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வில் தான் கலந்து கொண்டதாகவும் குழு புகைப்படம் மற்றும் உணவு உண்ணும் நேரத்தில் மட்டுமே தாம் அணிந்திருந்த முகக்கவசத்தை அகற்றியதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற புகைப்படங்களைப் பயன்படுத்தி தேவையற்ற விளம்பரம் பெற முயற்சிக்கும் சிறு குழந்தை போன்ற நடவடிக்கைகள் குறித்து தான் கவலைப்படவில்லை என்றும் ஒரு பொறுப்புள்ள அரசியல்வாதியாக எப்போதும் நாட்டின் சட்டங்களின்படி செயற்படுவதாகவும் தெரிவித்தார். (நி-4)



# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2306

### குரு

காலை முதல் மாலை வரை Phone ஐ நோண்ட வேண்டியது



இரவு வந்தவுடன் தனிமையில் எதிர்காலத்தைப் பற்றி நினைத்து அழ வேண்டியது...

### பிருத்தி

வாடா புதுசா கார் எல்லாம் வாங்கியிருக்க போல என்ன வியாபாரம் பண்ற?



மாஸ்க் விக்கிறேன்ண....


### பவ்யா



கை தூக்கி விடுவார்கள் என நம்பி அனைவரிடமும் கையை நீட்டி விடாதே சிலர் குழியில் தள்ளிவிடக் கூட கைகளை பிடிக்கலாம்

### தனேஷ்

ஆண்களை விட பெண்களே உண்மையாக காதலிக்கிறார்கள்கள்



இத்துடன் விளையாட்டுச் செய்திகள் முடிவடைகின்றன.

### காந்தன்

சித்திரகுப்தரே! பூலோகம் சென்று வந்தீரே
அங்கு என்ன விஷேசம்
மகாராசா! அங்கு எல்லோரும் முகத்திற்கு ஒரு வகை கவசம் அணிந்திருப்பதால் எனக்கு ஆட்களை அடையாளம் காண முடியாமல் போய்விட்டது.
ஆதலால் முகக் கவசம் அணியாதோர் சிலரைத்தான் இங்கு என்னால் கொண்டு வர முடிந்தது

### மாதுமை

தனிமை உன்னை சுடுதா?
தனிமை எங்கம்மா சுடுது
இந்த வெயில்தான்
சுடுது சுட்டெரிக்குது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் [illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் இருந்து வருவோர் இலங்கையில் தரையிறங்க முடியாது

## விமான சேவைகள் அதிகார சபை

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து வருகைதரும் எந்தவொரு பயணிகளுக்கும் இலங்கையில் தரையிறங்க அனுமதியளிக்கப்படமாட்டாது என சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொவிட் பரவல் நிலைமையைக் கவனத்தில் கொண்டு உடன் அமுலாகும் வகையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (நி-4)

# ஹனா சிங்கர்-சஜித் சந்திப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கருக்கும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் இடையில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றிருந்த இந்த கலந்துரையாடலில், தற்போது நாட்டில் பரவி வரும் கொரோனா வைரஸ் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஏற்பட்டுள்ள சவால் நிலைமைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையினை சமாளிப்பதற்கான ஒத்துழைப்புகளை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர், ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட பிரதிநிதியிடம் கோரியுள்ளார்.

இது குறித்து விசேட அவதானம் செலுத்திய பிரதிநிதி, அதற்கான உச்சபட்ச தலையீட்டை மேற்கொள்ளவுள்ளதாக ஹனா சிங்கர் உறுதியளித்துள்ளார்.

அரசியல் என்ற ரீதியில் பல்வேறு பரஸ்பரங்கள் காணப்பட்டாலும் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி, கொவிட்-19 பரவலைப் பயன்படுத்தி அரசியலில் ஈடுபடமாட்டாது என ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (நி-4)

# பொதுமன்னிப்புக் கோரும் கடிதம் சஜித்திடம் கையளிப்பு



(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கையெழுத்திட்டுள்ள பொதுமன்னிப்புக் கோரும் கடிதம் அவரின் சட்டத்தரணி ஊடாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸ ஆவணங்களைப் பெற்றுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவரின் செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் குறித்த ஆவணங்களை ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகளிடம் ஒப்படைத்துள்ளார் எனவும் அந்த ஆவணங்கள் விரைவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# ரயில்வே ஊழியர்களிடம் அதிகரிக்கும் வைரஸ் தொற்று

(கொழும்பு)

ரயில்வே ஊழியர்களிடையே கொவிட்-19 தொற்றின் பரவல் அதிகரித்து வருவதாக தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் இலங்கை ரயில்வே கடுமையான ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளதாக ரயில்வே தொழிற் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

சுகாதார வழிகாட்டுதல்கள், கொவிட்-19 பரவுவதைத் தணிக்கவும் தடுக்கவும் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போதிலும் ரயில்வே அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதால் வைரஸ் பரவுவது வேகமாக அதிகரித்துள்ளது.

எதிர்காலத்தில் ரயில்வே அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றால் ஏராளமான ஊழியர்கள் கொரோனா வைரஸால் பாதிப்படையக் கூடும்.

மேலும் இது பயணிகளையும் அதிக ஆபத்தில் ஆழ்த்தக்கூடும் என்றும் இலங்கை ரயில்வே தொழிற் சங்கத்தினர் எச்சரித்துள்ளனர். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனம் ஏமாற்றும்!

ஒரு ஊரில் புகழ்பெற்ற பத்திரிகையாளர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு நாள் திடீரென இறந்து போனார். அதற்குப்பிறகு நேராக சொர்க்கத்திற்குப் போனார். சொர்க்கத்தின் வாசலிலே நின்றுகொண்டிருந்த ஒருத் தர் அவரைத் தடுத்தார். இதோ பார் ஏற்கனவே இங்கே பன்னிரண்டு பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கே இங்கே வேலை இல்லை. அதற்கு என்ன காரணம் என்றால் சொர்க்கத்திலே திடுக்கிடும் செய்திகள் என்ன இருக்கப்போகிறது. இங்கே எல்லாம் ஒழுங்காக நடந்து கொண்டுதான் இருக்கிறது.

எல்லாம் ஒழுங்காக நடந்தால் பத்திரிகைகளுக்கு சுவாரஸ்யமான கொலை, கொள்ளை , தீ வைப்பு இதுமாதிரி எதுவும் இங்கே இல்லை. ஏற்கனவே இங்கே இருக்கின்றவர்கள் எல்லோரும் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு தியானம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.அந்த ஒரு செய்தி தான் தினமும் இங்கே வந்துகொண்டிருக்கிறது.

அதைப் படிப்பதற்கே இங்கே ஆளில்லை. அதனாலே தான் நான் என்ன சொல்கிறேன் என்றால், நீ நரகத்திற்குப் போ. அங்கே எவ்வளவோ நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கே தான் அதிகமான பத்திரிகையாளர்கள் தேவைப்படுவார்கள்.

அங்கே உனக்கு நிறைய வேலை இருக்கும். அதைச் செய்வதிலே நீயும் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்றார் அங்கே அந்த சொர்க்கத்தின் வாசலிலே நின்றுகொண்டிருந்தவர்.

இந்த பத்திரிகையாளர் அங்கேயே நின்று கொஞ்சம் யோசனை செய்தார். இவருக்கு சொர்க்கத்திலேயே இருக்க வேண்டும் என்றுதான் ஆசை. அதனாலே மெதுவாக அவரிடம் சொன்னார்... ஐயா என்னை ஒரு 24 மணி நேரம் இங்கே உள்ளே இருப்பதற்கு அனுமதி கொடுங்கள். அங்கே இருக்கின்ற பல பத்திரிகையாளர்களை எனக்குத் தெரியும். அவர்களிலே சிலபேரை சமாதானப்படுத்தி மெதுவாக நரகத்திற்கு அனுப்பி வைத்து விடுகிறேன். நான் இங்கேயே இருந்து கொள்கிறேன். உங்கள் கணக்குப்படி 12 பேருக்கு மேலே இங்கே தாண்டாது என்றார்.

சரி அப்படியே உனக்கு அனுமதி கொடுக்கிறேன். ஆனால் ஒரு விடயம், 24 மணி நேரம் தான் அனுமதி. அதற்குள்ளே எல்லாம் நடக்க வேண்டும் என்றார்.

சரி என்று சொல்லிவிட்டு இந்தப் பத்திரிகையாளர் உள்ளே போனார். யோசனை செய்தார். திட்டம் போட்டு ஒரு புரளியை கிளப்பி விட்டார். சக பத்திரிகையாளர்களை கூப்பிட்டுச்சொன்னார்.

இதோ பாருங்கள் நரகத்திலே ஒரு பெரிய தினசரி பேப்பரை கொண்டு வர திட்டம் போட்டிருக்கிறார்கள். அதற்குப் பல அதிகாரிகள் தேவைப்படுகிறார்கள். நிறைய சம்பளம் கிடைக்கும். யார் யாரெல்லாம் நரகத்திற்குப் போக ஆசைப்படுகிறீர்களோ அவர்களெல்லாம் போகலாம் என்று புரளியைக் கிளப்பி விட்டார்.

24 மணி நேரம் கழித்து வாசல் பக்கம் போனார். அங்கே இருந்தவர்களிடம் எத்தனை பேர் வெளியேறினார்கள் என்று விசாரித்தார். அப்போது அவர் இவரை வெளியே போகக் கூடாது. நீங்கள் உள்ளே தான் இருக்க வேண்டும் என்று தடுத்தார். அதன்பிறகு சொன்னார் ...நீ சொன்ன செய்தியைக் கேட்டதும் இங்கே இருந்த எல்லா பத்திரிகையாளர்களும் நரகத்திற்குப் போய்விட்டார்கள். இங்கே யாரும் இல்லை. அதனாலே உள்ளேயே இருக்கலாம்.

இதைக்கேட்டதும் இந்தப் பத்திரிகையாளரே குழம்பிப் போய்விட்டார். ஒரு வேளை உண்மையிலேயே நரகத்திலே புதிதாக பத்திரிகை ஆரம்பிக்கப் போகின்றார்களோ என நினைக்க ஆரம்பித்து விட்டார்.

அதன் பிறகு சொன்னார்.. ஐயா என்னை விட்டுவிடுங்கள். நான் நரகத்திற்கே போய் விடுகிறேன். அங்கே ஏதோ விசேஷம் இருக்க வேண்டும். இல்லையென்றால் இத்தனை பேரும் ஒட்டுமொத்தமாக அங்கே போயிருக்க மாட்டார்கள். என்னைத் தடுக்காதீர்கள் என்று கெஞ்ச ஆரம்பித்தார்.

மற்றவர்கள் நம்ப வேண்டும் என்பதற்காக ஒரு புரளியைக் கிளப்பி விட்டார். கடைசியிலே தானே அந்த புரளிக்கு ஆளாகிவிட்டார். அதாவது பிறரை ஏமாற்றிய அவரது மனம் கடைசியிலே அவரையே ஏமாற்ற ஆரம்பித்து விட்டது.

நீங்கள் இப்படி பிறரை ஏமாற்ற உங்கள் மனதைப் பழக்கப்படுத்துகிறீர்கள். ஆனால் கடைசியிலே அதனாலே நீங்களே ஏமாற்றப்படுகிறீர்கள். அதனாலே உங்கள் மனதிடம் ரொம்பவும் எச்சரிக்கையாகவே இருங்கள் என்றார் ஓஷோ.

நமது ஆட்கள் அங்கே பேய் இருக்கு, பிசாசு இருக்கு என்று புரளியைக் கிளப்பிவிடுவதுண்டு. இருட்டு நேரம் காட்டு வழியாக ஒருத்தன் போய்க் கொண்டிருந்தான். அங்கே பேய் - பிசாசு நடமாட்டம் இருப்பதாக வதந்தி. அவன் பயந்துகொண்டே வேகமாகப் போனான்.

காடு முடிந்து பிரதான வீதிக்கு வந்து சேர்ந்தான். அப்பாடா...ஒரு பேருந்து நின்றுகொண்டிருப்பது இருட்டில் இலேசாக தெரிந்தது. ஓடிப்போய் ஏறி உள்ளே உட்கார்ந்துகொண்டான். அதன்பிறகு தான் தெரிந்தது உள்ளே யாருமே இல்லை. சாரதியும் இல்லை. நடத்துநரும் இல்லை.

இவனுக்கு பேய் பயம் அதிகமாகவே இருந்தது. இந்த நேரம் பார்த்து அந்த பேருந்து தானாக நகர ஆரம்பித்தது. சாரதி இருக்கை காலியாக இருந்தது. ஆனால் பேருந்து நகர்ந்தது. அவன் உடம்பு முழுவதும் நடுங்க ஆரம்பித்து விட்டது. வீல் என்று கத்தலாமா என்று பார்த்தான். அந்த நேரம் பார்த்து அவன் தோளிலே ஒரு கை விழுந்தது.

திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தான். அங்கே சாரதி நிற்கிறார். அவர் சொல்கிறார்... யோவ் ஏற்கனவே பேருந்து பிறேக்டவுண்... நாங்களெல்லாம் பின்னால் இறங்கி நின்று தள்ளிக்கொண்டிருக்கிறோம். நீ மட்டும் ஜாலியாக ஏறி உட்கார்ந்திருக்கிறியா? இறங்கி வாய்யா... தள்ளலாம் என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 33 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### யாழ்.நூலக கட்டட மீள் புனரமைப்பு

1985 இற்குப் பின் பீரங்கிகளின் தோட்டாக்களாலும் எறிகணைகளாலும் யாழ்.நூலகத்தின் முழுக் கட்டடத்திற்கும் சேதங்கள் ஏற்பட்டன. இச் சேதங்களை கணிப்பிட்டு புனரமைப்பு செய்வதற்கு 1998 இல் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகவிருந்த சந்திரிகா குமாரதுங்க, "சகல மக்களும், அவர்களின் இனம், மதம், அரசியல் வேறுபாடுகளை மறந்து, செய்த மாபெரும் பிழையை நிவர்த்தி செய்வதற்கு பொன்னான சந்தர்ப்பம் கிடைத்ததென்று" எண்ணினார். சேதமுற்ற யாழ்ப்பாணப் பொதுசன நூல் நிலையத்தைப் புனரமைத்துக் கொடுப்பதென்று தீர்மானித்தார். அதற்காக இவ் விடயத்தை அப போது அவரின் தலைமையில் இயங்கிய "வெண்தாமரை" (சுது நெலும்) என்னும் இயக்கத்தின் பொறுப்பில் விட்டார்.

இனங்களை ஒன்றிணைப்பதற்கான இயக்கமாக ஸ்தாபிக்கப்பட "வெண்தாமரை" தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிற்குத் தலைவராக அமைச்சர் மங்கள சமரவீர நியமிக்கப்பட்டிருந்தார். எனவே யாழ்ப்பாணப் பொதுசன நூல் நிலையப் புனரமைப்பு சம்பந்தமாக அவர் தலைமையில், பொறியியலாளர்கள், கட்டடக்கலைஞர்கள், நூலக அறிஞர்கள் எனப் பலரடங்கிய குழு அமைக்கப்பட்டது.

இந்தக்குழுவில் அங்கம் வகித்த வி.எஸ்.துரைராஜா புனரமைப்புப் பணிக்கு வேண்டிய வரைபடங்களையும் செலவு மதிப்பீடுகளையும் தயாரிக்கப் பணிக்கப்பட்டார்.

பழைய கட்டடத்தின் கலை அம்சங்கள் எதுவும் மாறாமல் இருக்கத்தக்கதாக புனரமைப்பும் திருத்த வேலைகளும் இருக்க வேண்டும் என்றும் அத்துடன் நவீன தற்கால வசதிகளுடன் முழுத் தேசத்துக்குமான தேசிய நூலகமாக விளங்க வேண்டுமென்றும் நியமிக்கப்பட்ட குழு விரும்பியது.

ஏலவே இயங்கிய கட்டடத்தின் இடப் பரப்பு 19800 சதுர அடியே கொண்டிருந்தமையால் இந்த இடப்பரப்பு தேசிய நூலகமொன்று அமைவதற்குப் போதாதென்று குழு கருதி, மேலதிக கட்டடங்களைச் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு வி.எஸ்.துரைராஜாவுக்கு ஆலோசனை கூறியது.

அதன்படி பழைய கட்டடத்தின் இருமருங்கிலும் நாலுமாடிக் கட்டடங்களை இணைத்து ஒரே பெரிய கட்டடமாக வடிவமைக்கப்பட்டது. பழைய கட்டடத்தின் திராவிடக் கட்டடக்கலை அம்சங்கள் புதிய கட்டடங்களுக்கும் சேர்க்கப்பட்டன. உத்தேசித்த கட்டடங்களின் மேலதிக இடப்பரப்பு 60,000 சதுர அடியாகும். இக்கட்டடங்கள் கட்டுவதற்கு வேண்டிய மொத்த செலவு, 700 மில்லியன் ரூபாயென மதிப்பிடப்பட்டது.

இத்திட்டத்தின் பெருந்தொகையான பணத்தைப் பெறும் பொருட்டு வெண்தாமரை இயக்கம் "புத்தகமும் செங்கல்லும்" பெயரிய சின்னத்தைப் பாவித்து நாடடங்கிய பிரசாரத்தை நிதி சேர்ப்பதற்காகத் தொடங்கியது.

முதலாவது கட்டமாக உத்தேச நாலு மாடிக் கட்டடத்தினைக் கட்டி முடிப்பதென்றும் அதைத் தொடர்ந்து இரண்டவது நாலுமாடிக் கட்டடத்தைக் கட்டி முடிப்பதென்றும், அதன் பிறகே சேதமுற்ற கட்டடத்தை சீர்செய்தலைக் கவனிக்கலாமென்றும் குழு தீர்மானித்தது. தேசிய இணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் மங்கள சமரவீர தமது அமைச்சின் வேலைப்பளு காரணமாக தொடர்ந்தும் இந்தப் பணியைச் செய்ய முடியாமல் போயிற்று. எனவே, வெளிநாட்டு விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் புனரமைப்புத் திட்டத்தை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சேதமுற்ற கட்டடத்தைச் சீராக்குவதற்கான சாத்தியக்கூறு பற்றி ஆராயமுற்பட்டார். இதற்காக நிர்மாணப் பொறியியலாளர் குழுவொன்றை அமைத்து, கட்டடத்தை பார்வையிட்டு அதை நிர்மாணிப்பது பாதுகாப்பானதா? என்றும், பாதுகாப்பானதென்றால் எப்படி அதைப் பொருத்தமான விதத்தில் செய்து முடிப்பதென்றும் ஆலோசனை கூறும்படி கேட்டார். அந்த பொறியியலாளர் குழுவில் அங்கம் வகித்தோர் வருமாறு,

1. அன்ரன் பெர்ணாந்து, பொது முகாமையாளர் **(NERD)**, தேசிய பொறியியல் ஆராய்ச்சிப் பிரிவு.

2. வை.ஆர்.திலகரத்தின, தலைவர், சிவில் பொறியியலாளர் திணைக்களம் - **(NERD)**

3. கலாநிதி [illegible] டயஸ், இணைப்பேராசிரியர், [illegible]ட்டுவை பல்கலைக்கழகம்.

அந்த நேரத்தில், மே மாதம் 1999, யாழ்ப்பாணத்தில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தமையால் விமான சேவையோ ரயில் சேவையோ, பேருந்து சேவையோ கிடையாது. இதனால் இப்பொறியியலாளர் குழுவை விமானப்படை விமானத்தில் ஏற்றிச் செல்லப்பட்டது. இவர்களின் தங்குமிட வசதி, போக்குவரத்து, பாதுகாப்பு யாவற்றையும் பாதுகாப்புப்படை பொறுப்பதிகாரி ஏற்பாடு செய்தார்.

இப்பொறியியலாளர் குழு, சேதமடைந்த யாழ்ப்பாண நூலகக் கட்டடத்தை கவனமாகச் சோதித்து ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பித்தது. அவ்வறிக்கையின் சாராம்சம் பின்வருமாறு:-

"......... எரிந்தும், உட்புறமாக நிலம் தோண்டப்பட்டும். வெடித்தும், கறைபடிந்தும் இருந்தாலும், கட்டடத்திற்கு திருத்தம் செய்யக்கூடியதாக உள்ளது. தீயும், கறையும் முன்னைய கிழக்குப்புறமாக் (பழைய) அமைந்த பகுதியைத் தாக்கியிருக்கின்றன. வெடிப்புகள் முழுக்கட்டடத்தையும் தாக்கியிருக்கிறது. குறிப்பிடத்தக்களவுக்கு (புதிய) மேற்குப் பாகத்தில்தான் அதிகம் தாக்கியிருக்கிறது.

தீயினாலும் கறையினாலும் ஏற்பட்ட சேதங்களுக்கு பெருமளவு திருத்தங்கள் செய்யலாம், அதே வேளை, குண்டுகளால் தகர்க்கப்பட்ட இடங்களுக்கு புதிய உபகரணங்கள் உபயோகிக்க வேண்டும். மேற்குப்பக்க கூரைக்கு பாரம் குறைந்த பொருட்களை உபயோகிக்க வேண்டும்.

கிழக்குப் பக்க கூரைக்கு, தண்ணீர் புகாதவாறு செய்ய வேண்டும். அகழ்ந்த பாகங்களுக்கு நிரப்புதல் செய்ய வேண்டும். முழுக் கட்டடத்திற்கும் புதிய ஜன்னல்கள். கதவுகள் பூட்டப்பட்டு பூச்சடித்து ஏனைய வசதிகளும் செய்யப்பட வேண்டும்."

பொறியியலாளர் குழு வழங்கிய அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு அமைச்சர் கதிர்காமர் சேதமுற்ற கட்டடத்தை புனரமைப்பதென்று தீர்மானித்தார். அவரின் அமைச்சான வெளிநாட்டு விவகார அமைச்சு உள்ளூர் கட்டட ஒப்பந்தக்காரரை விலை விண்ணப்பம் அனுப்புமாறு கேட்டுக்கொண்டது. யாழ்ப்பாணம் அப்போது இருந்த நிலைமையில் யாரும் முன்வரவில்லை. கடைசியில் அரசாங்க கட்டடத் திணைக் களத்தை வேலையைப் பொறுப்பேற்குமாறு அவர் பணித்தார். அப்போது இத்திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திருச்செல்வம் நிர்மாணிப்பு. வேலைக்குப் பொறுப்பேற்றார். யாழ்ப்பாணக் கிளையின் பிரதம கட்டடப் பொறியியலாளர் தேவராஜன், வதிவிடப் பொறியியலாளர் வி.செல்வராஜாவுடன் கட்டட வேலைகளை நிர்வகித்தார்.

தேவராஜனும் அவரின் பொறியியலாளர்களும் தொழில்நுட்பவியலாளர்களும் அர்ப்பண சிந்தையுடன் வேலை செய்தமை விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

ஏனென்றால் அவர்கள் உயிரைப் பணயம் வைத்து வேலையைச் செய்தார்கள். 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மிகவும் சிரமத்துடன் உயிருக்குப் பயமிருந்தும் புனரமைப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டது.

தொழிலாளர்களை வேலைக்குச் சேர்ப்பதென்பது சிரமமான காரியமாக இருந்தது. உள்ளூரில் கட்டடப் பொருட்கள் கிடையாமலிருந்தது. கொழும்பிலிருந்து சீமெந்து, உருக்குப் பொருட்கள், இரும்புப் பொருட்கள், இணைப்புப் பொருட்கள் எல்லாம் கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்டன. மணல், சரளைக் கற்கள் கூட வெகுதூர இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டன.

கட்டடத்தைப் புனரமைக்கும் போது ஆரம்பத்தில் இருந்த அதே கட்டடக்கலை வேலைப்பாடுகளைச் செய்ய வேண்டியது அவசியமாயிற்று. ஒவ்வொரு சிற்ப வேலைப்பாடும் சேதமுற்ற கட்டடத்தில் சிதறிக் கிடந்தது. அவையெல்லாவற்றையும் சேகரித்து அளந்து, பிரதி எடுத்து ஒளிப்படம் பிடித்து மிகக் கவனமாக சிதைந்துபோன கட்டடத்தில் முன்பு தோன்றிய வண்ணம் அச்சொட்டாக வடிவமைக்கப்பட்டது. திராவிடச் சிற்பக்கலையில் அனுபவமுள்ள உள்ளூர் சிற்பிகள் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள்.

சேதமடைந்த சரஸ்வதியின் சிலையும் வண.பிதா லோங்கின் சிலையும் பூர்வ முறையில் வடித்து மீண்டும் நிலைநாட்டப்பட்டன. இவை இன்று நூலகத்தின் முன் பக்கத்தை அலங்கரிக்கின்றன.

2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் புனரமைப்புப் பணிகள் முற்றுப்பெற்றன. இன்று இக்கட்டடத்தைப் பார்ப்பவர்கள் எவரும் வியப்பார்கள், இக்கட்டடம் எப்போதாவது எரிக்கப்பட்டதா, என்று.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ஸ்தானிகர் பதவியை ஏற்க மறுத்தார் சட்டமா அதிபர்



(கொழும்பு)

கனடாவுக்கான உயர்ஸ்தானிகராக தன்னை நியமித்தமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, அப்பதவியை நிராகரித்து பொதுமக்களுக்கு சேவை செய்வதற்காக இலங்கையிலேயே தங்கியிருக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார். (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்



### விரதங்கள்

## லட்சுமி அருள்தரும் ரத சப்தமி

(தொடர்ச்சி)

### பீஷ்மருக்கு நீர்க்கடன்



மகாபாரதப் போரில் போர்க்களத்தில் வீழ்த்தப்பட்ட பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்து இருந்தார். நினைத்த நேரத்தில் உயிர் விடலாம் என்று அவர் வரம் பெற்று இருந்ததால் பீஷ்மரின் உயிர் உடனடியாகப் பிரியவில்லை. காலம் சென்று கொண்டே இருந்தது. பலர் வந்து பார்த்த வண்ணம் சென்றனர்.

அப்போது அங்கு வந்த வியாசரிடம் "நான் என்ன பாவம் செய்தேன். என் உயிர் போகவில்லையே" என்று பீஷ்மர் மனம் வருந்தினார்.

அதற்கு வியாசர் "ஒருவர் தன் மனம், மொழி, மெய்யால் தீமை செய்யாவிட்டாலும் பிறர் செய்யும் தீமைகளைத் தடுக்காமல் இருந்தாலும் பாவம் தான் என்றார். உடனே பீஷ்மருக்கு சபை நடுவே பாஞ்சாலியின் உடைகளைத் துச்சாதனன் துகில் உரிந்த போது அதைத் தடுக்காமல் இருந்த தவறு நினைவுக்கு வந்தது. இதற்கு விமோசனம் இல்லையா? என்று கேட்டார்.

அதற்கு வியாசர் எப்பொழுது நீ உன் பாவத்தை உணர்ந்தாயோ அப்போதே அது அகன்று விட்டது. இருந்தாலும் கண்டும் காணாமல் இருந்த கண்கள், செவி, வாய், தோள், கைகள், புத்தி உள்ள தலை ஆகியவை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்பது விதி என்றார் வியாசர். உடனே சூரியனின் நெருப்பைக் கொண்டு தன்னைக் சுட்டுப் பொசுக்குமாறு வேண்டுகிறார் பீஷ்மர். அதற்கு வியாசர் அவரிடம் எருக்க இலை ஒன்றைக் காட்டி எருக்க இலை சூரியனுக்கு உகந்தது.

சூரியனின் சாரம் உள்ளது. ஆகவே அந்த இலைகளால் உன் அங்கங்களை அலங்கரிக்கிறேன் என்று கூறி பீஷ்மரின் அங்கங்களை எருக்க இலையால் அலங்கரித்தார். இதனால் அமைதியாக இருந்த பீஷ்மர் தியானத்தில் மூழ்கி ஏகாதசியன்று உயிர் நீத்தார்.

பீஷ்மருக்கு நீத்தார் கடன் செய்ய யாரும் இல்லாததால் தர்மர் வருத்தப்பட்டார். இது குறித்து அவர் வியாசரிடம் கூற, அதற்கு அவர் சூரியனுக்காக எருக்க இலை சூடி விரதம் இருக்கும் ரத சப்தமி நாளில் நாடு முழுவதும் மக்கள் பீஷ்மருக்காக நீாக்கடன் அளிப் பார்கள் என்று கூறினார்.

ரத சப்தமி நாளில் எருக்க இலைகளை வைத்துக் கொண்டு குளிக்கும் மக்கள் தங்கள் பாவங்களில் இருந்து விடுபடுவார்கள்.

பீஷ்மருக்கும் நீர்க்கடன் அளித்த புண்ணியம் கிடைக்கும் என்று கூறினார். அதனரல் தான் ரத சப்தமி அன்று விரதம் இருப்பதும் எருக்க இலையை உடலில் பல அங்கங்களிலும் வைத்துக் கொண்டு குளிப்பதும் ஏற்பட்டது.

சூரிய சக்கரத்தில் உள்ள ஆறு கட்டைகளும் ஆறு ருதுக்களைக் குறிக்கின்றன. சக்கரத்தின் மேல் பாகமும் கீழ்ப்பாகமும் உத்திராயணம், தட்சினாயணத்தைக் குறிக்கின்றன. சூரியன் நான்கு பட்டணங்களையும் சுற்றிவந்து உதயம், மத்தியானம் அஸ்தமனம் அர்த்தராத்திரி என்ற காலங்களை உண்டாக்குகிறார்.

சூரிய பகவானுக்கு உரிய விரதங்களில் மிக முக்கியமானது ரத சப்தமி. அவரது பிறந்த தினத்தையே ரத சப்தமியாகக் கொண்டாடுகின்றனர். சூரிய ஜெயந்தி என்பது இந்த விழாவின் மறுபெயர். சப்தம் என்றால் ஏழு. இதனால் தான் அமாவாசை கழிந்து பௌர்ணமி கழிந்த 7 ஆம் நாளை "சப்தமி திதி" என்கிறோம்.

உத்திராயண புண்ணிய காலத்தின் தொடக்க மாதமான தை மாதம் வளர்பிறையில் 7 ஆவது நாள் வரும் சப்தமி திதியே ரத சப்தமி ஆகும். ரத சப்தமி யன்று சூரியனுக்கு விசேடமா ஒளி உண்டாயிற்று எனப் புராணங்கள் கூறுகின்றன.

அன்று சூரியன் பயணிக்கும் தேரை இழுத்துச் செல்லும் 7 குதிரைகளும் ஒரு [illegible] (முற்றும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதிமுறை மீறல் மேலும் 238 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் 238 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியைப் பேணாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்கு அமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

## வங்கியில் துப்பாக்கிச் சூடு காவலாளி காயம்

(கொழும்பு)



அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தனியார் வங்கி ஒன்றின் ஏ.ரி.எம்.இயந்திரத்தில் வைப்பிலிடுவதற்காக கொண்டுவரப்பட்ட பணத்தை கொள்ளையிட முயற்சித்த போதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் காவலாளி ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 100 | 120 |
| தக்காளி | 140 | 140 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 60 | 50 |
| கோவா | 100 | 120 | 120 | 120 |
| கரட் | 120 | 180 | 160 | 200 |
| பூசணி | 40 | 60 | 50 | 60 |
| புடோல் | 100 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 300 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 160 | 160 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 130 | 120 | 160 |
| பயற்றங்காய் | 100 | 60 | 70 | 60 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 100 | 70 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 450 | 500 | 400 | 400 |
| போஞ்சி | 150 | 180 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 90 | 40 | 40 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 70 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 180 | 180 | 250 |
| வெங்காயப்பூ | 300 | -- | 160 | 240 |
| முள்ளங்கி | 80 | 70 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | -- | 180 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குளவி கொட்டியதில் இருவர் வைத்தியசாலையில்

(தருமபுரம்)

கிளிநொச்சி புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தில் உரம் பெறுவதற்காக நேற்று முன்தினம் ஒருவரும் நேற்றைய தினம் மற்றுமொருவரும் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் தருமபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம்தொடர்பாக மேலும் தெரியவருகையில், நீண்ட நாட்களாக ஆலமரத்தில் குளவிக் கூடு ஒன்று இருப்பதாக தெரியவந்த நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் குறித்த இருவரும் குளவிக் கொட்டுக்கு இலக்காகி தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் குளவிக் கூட்டினை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப் பகுதி மக்கள் தெரிவித்தனர் . (5-4-316)




யாழ்ப்பாணம்- தெல்லிப்பழை பகுதியில் பொலிஸாரால் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. (படம்: சிவசாந்தன்)

## யாழ். பிரதேச மத்தியஸ்தர் சபை நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெற்று வந்த யாழ்.பிரதேச மத்தியஸ்தர் சபை மறு அறிவித்தல் வரை நடைபெற மாட்டாது என்று அதன் தவிசாளர் திருமதி முரளிதரன் கௌரி அறிவித்துள்ளார்.

(5-4-106)

## இலங்கை மக்களுக்கு நன்றி தெரிவித்தது இந்திய உயர்ஸ்தானிகராலயம்

(யாழ்ப்பாணம்)

முன்னொரு போதும் எதிர்கொண்டிராத கொவிட் நோய்க்கு எதிராக தீவிரமான போராட்டத்தை முன்னெடுத்துவரும் நிலையில் இந்திய சகோதரர்களின் நலனுக்காக வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டதுடன் தொடர்ந்து பிரார்த்தனைகளையும் முன்னெடுத்து வரும் இலங்கை மக்கள் மற்றும் மத குருமார்கள் உள்ளிட்டோருக்கு இந்திய மக்கள் சார்பாகவும் அரசாங்கம் சார்பாகவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் தனது இதய பூர்வமாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இருநாட்டு மக்கள் மத்தியிலும் மிகவும் ஆழமாக வேரூன்றி இருக்கும் உறவுகள் அத்துடன் இலங்கை மற்றும் இந்தியா இடையிலான பல்லாயிரம் ஆண்டு கால பிணைப்பு ஆகியவற்றின் உண்மையான பிரதிபலிப்பாக இடம்பெற்ற இந்த பிரார்த்தனைகள் மற்றும் வழிபாடுகள் போன்றவற்றால் இந்திய உயர்ஸ்தானிகராலயம் பணிவன்புடன் மன நெகிழ்வடைகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(5-4)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் விநாயகர் குடியிருப்புப் பகுதியில் கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட இரு குடும்பங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் ஒழுங்குபடுத்தலில் அத்தியாவசியப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

(படம்: கிருஷ்ணகுமார்)



தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் (டெலோ) சிறீ சபாரத்தினத்தின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல் தின நிகழ்வு அவர் படுகொலை செய்யப்பட்ட இடமான கோண்டாவில் அன்னங்கை தோட்ட வெளியில் நேற்று வியாழக்கிழமை வலி.கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு மன்னாரிலும் இடம்பெற்றது. (படம்: ரவிசாந்த், ஜோசப் நயன், சிவசாந்தன்)

## கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட சர்வமதப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தற்போது உலகை உலுக்கிவரும் கொவிட் - 19 தொற்றுப் பரம்பல் நீங்கி, சுபீட்சமானதொரு வாழ்வு மலர, உலக மக்களின் நன்மையையும் இலங்கைவாழ் மக்களின் நன்மையையும் வேண்டிச் சர்வமதப் பிரார்த்தனையினை ஒரே நேரத்தில் நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 5.46 மணிக்கு, இலங்கைத் திருநாட்டில் உள்ள அனைத்து சமயத் தலங்களிலும் நிகழ்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

நாட்டின் பிரதமர் எண்ணத்திற்கமைவாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கான அறிவுறுத்தல்களைச் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம், அனைத்து இந்து ஆலயங்களிலும் இத்தருணத்தில் விசேட வழிபாட்டினை மேற்கொள்ளுமாறும் இந்த விசேட வழிபாட்டில் இயன்றளவிற்கு மஹா ம்ருத்யுஞ்ஜய யாக வழிபாட்டினையும் நிகழ்த்தி வழிபாடாற்றுமாறும் இந்த விசேட வழிபாட்டினை ஆலய அறங்காவலர் மற்றும் கிரியைகளை நிறைவேற்றும் சிவாச்சாரியார்களோடு மட்டுப்படுத்தி ஆற்றிக் கொள்ளுமாறும் இந்து மக்கள் அனைவரும் தங்கள் வதிவிடங்களில் இருந்தபடியே இத்தருணத்தில் விளக்கேற்றி மானசீகமாகப் பிரார்த்தனை செய்யுமாறும் அறிவிக்கப்பட்டது. (5-4)

# கொடிகாமத்தில் தொற்று நீக்கல் செயற்பாடு முன்னெடுப்பு




(யாழ்ப்பாணம்)

கொடிகா மத்தில் கிருமித் தொற்று நீக்கும் செயற்பாடு நேற்றைய தினம் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, கொடிகாமம் பகுதியில் கடந்த வாரத்தில் அதிகளவு கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து கொடிகாமம் நகர்ப்பகுதி, சந்தை, கடைத்தொகுதி மற்றும் இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நேற்று இராணுவத்தினரால் குறித்த பகுதிகள் நீர் ஊற்றி சுத்தம் செய்யப்பட்டு கிருமித் தொற்று நீக்கும் மருந்து விசிறும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் வழிகாட்டுதலில் இராணுவத்தின் 52 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரியின் நெறிப்படுத்தலில் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. (5-4-18-30-33)

## கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு சாரதிகளும் மக்களும் கோரிக்கை

(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வரணி சந்தைப் பகுதி வீதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளினால் ஏற்படும் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

நேற்று முன்தினம் புதன் கிழமை வீதியில் மாட்டுடன் ஹயஸ் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது.

இதில் அடிபட்ட பசுமாடு நடக்க முடியாத நிலையில் காணப்படுகிறது.

அத்தோடு வாகனத்தின் முன்பகுதியும் பலத்த சேதமடைந்தது.

அதன் சாரதி காயமின்றி தப்பித்துக் கொண்டார்.

இதுபோன்ற சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்றுள்ளன என வாகன சாரதிகள் மற்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கால்நடைகளின் உரிமையாளர்கள் அவற்றைக் கட்டி வளர்க்கவேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் பிரதேச சபையினர் வீதிகளில் திரியும் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடித்து உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிட வேண்டும் என சாரதிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(5-4-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒரே சமயத்தில் மாபெரும் காரியத்தைச் சாதிப்பதற்காகக் காத்துக்கொண்டிருப்பவர்கள் ஒரு காரியத்தையும் சாதிக்கமாட்டார்கள். எனவே கையில் கிடைத்ததை நன்கு பயன்படுத்திக்கொள். - டாக்டர் ஜான்சன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒரு பண்பாட்டு அடையாளம்போல மாஸ்க் அணியும் கலாசாரம்

கொரோனாத் தொற்றில் இருந்து தானும் மற்றவர்களும் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு முகக் கவசம் (Mask) அணிவது இலங்கையில் சட்ட வலுவுடையதாக ஆக்கப்பட்டுள்ளது.

மாஸ்க் அணிவதால் கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாக்கப்படுவது என்ற விடயம் விஞ்ஞான ரீதியாக உறுதி செய்யப்பட் டுள்ளது.

இதன் காரணமாக உலகம் முழுமையிலும் மாஸ்க் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இருந்தும் எங்கள் நாட்டில் மாஸ்க் அணிவது ஒரு பண்பாட்டு அடையாளம் போல இருப்பதுதான் வேதனைக்குரியது.

அதாவது மாஸ்க் அணிகின்றவர்கள் அதனை எதற்காக அணிகின்றோம் என்ற நோக்கத்தை மறந்து மாஸ்க் அணிகின்றனர்.

இன்னும் சிலர் மாஸ்க் அணியாமலே அதனைத் தவிர்த்து வருகின்றனர்.

இவர்கள் பற்றி நாம் பிரஸ்தாபிப்பதைத் தவிர்த்து, மாஸ்க் அணிகின்றவர்கள் அதனை உரிய விதிமுறையில் அணியாமல் நடந்து கொள்வது பற்றிச் சிந்திப்பது பொருத்துடையது.

அதாவது நேற்று முன்தினம் மாஸ்க் அணியாமல் யாழ்.நகர்ப் பகுதியில் நடமாடியவர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் இருந்தவர்களை பொலிஸார் அலாக்காகத் தூக்கி பஸ் வண்டிகளில் ஏற்றிச் சென்றனர்.

இவ்வாறு மாஸ்க் அணியாதவர்களை; கொவிட் பாதுகாப்பு அங்கிகளை உடுத்தியிருந்த நான்கு பொலிஸார், தூக்கிச் சென்றமை பார்ப்போரை வியக்க வைத்தது.

பரவாயில்லை. இப்படிச் செய்வதன் மூலம் மாஸ்க் அணிவதை முழுமையாக அமுல்படுத்த முடியும் என்ற நினைப்பில் பொலிஸார் அவ்வாறு செய்திருக்கலாம்.

இருந்தும் அவர்களின் நடவடிக்கையும் பெரிதாக வேலை செய்யவில்லை என்பதை அவதானிக்க முடிகிறது.

அதாவது மாஸ்க் அணிகின்றவர்கள் மாஸ்க்கை தமது நாடிக்கு அணிகின்றனரே தவிர, அதனை அணிவதன் நோக்கத்தை அவர்கள் இம்மியும் சிந்தித்திலர்.

இதுதவிர, ஒரு நாள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டிய முகக் கவசங்கள் இப் பொழுது மாதக் கணக்கில் பயன்படுத்தப்படு வதையும் அவதானிக்க முடிகிறது.

ஆக, முகக் கவசம் என்பது ஏதோ இந்தக் காலத்தில் மனிதர்கள் அணிய வேண்டிய ஒரு பண்பாட்டு அடையாளம்போல,

அல்லது முகக் கவசம் அணியாவிட்டால் பொலிஸார் கைது செய்வர் என்ற பயத்தில் அணியப்படுகின்றதே தவிர,

கொரோனாத் தொற்றில் இருந்து எம்மையும் எம் குடும்ப உறுப்பினர்களையும் மற்றவர்களையும் பாதுகாப்பதற்காக மாஸ்க் அணிகின்றோம் என்ற எண்ணத்தில் மாஸ்க் அணியப்படவில்லை என்பதை இங்கு கூறித் தானாக வேண்டும்.

இந்த மனநிலை மாறாதவரை மாஸ்க் அணிவதால் ஏற்படக்கூடிய அனுகூலம் எங்களுக்கு மிகக் குறைவாகவே இருக்கும்.

# பொலிஸார் என தெரிவித்து வவுனியாவில் நகைக் கொள்ளை

## ஓய்வுபெற்ற பொலிஸார் உட்பட மூவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் கடந்த வாரம் பொலிசார் என தெரிவித்து 30பவுண் நகை கொள்ளையிடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா நகர் மற்றும் தேக்கவத்தை பகுதிகளில் உள்ள வீடுகளிற்கு சென்ற இனம் தெரியாத நபர்கள் தங்களை பொலிஸார் என கூறியுள்ளனர். பின்னர் வீட்டில் சோதனை செய்வதுபோல பாசாங்கு செய்து விட்டு இரு வீடுகளில் இருந்தும் 30 பவுண் தங்க ஆபரணங்களை களவாடிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். அதற்கமைய குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மூன்று பேரை வவுனியா பொலிசார் நேற்று கைது செய்துள்ளனர். அவர்களில் ஒருவர் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் என்று கூறப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-3,299)

# யாழ்ப்பாணம் உட்பட 6 இடங்களுக்கான தபால் ரயில் சேவைகள் இடைநிறுத்தம்

கோவிட்-19 நோய்த் தொற்று பரவல் நிலைமை காரணமாக மறுஅறிவிப்பு வரும் வரை 6 இரவு அஞ்சல் சேவைகள் உட்பட 20 தொடருந்து சேவைகள் இன்றுமுதல் இரத்து செய்யப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை, திருகோணமலை, காங்கேசன்துறை, மிரிகம, அம்பேபுச மற்றும் வேயங்கொட தொடருந்து நிலையங்கள் மற்றும் அந்த நிலையங்களிலிருந்து கொழும்பு கோட்டை வரை செல்லும் பல தொடருந்துகள் இரத்து செய்யப்பட்டு ள்ளன.

மதியம் 1.30 மணிக்கு மருதானையிலிருந்து பாணந்துறைக்கும் பாணந்துறையிலிருந்து பிற்பகல் 3 மணிக்கு மருதானை வரை இயங்கும் தொடருந்து சேவையும் மேலும் அறிவிக்கப்படும் வரை இரத்து செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு - யாழ்ப்பாணம் இடையேயான தபால் தொடருந்து சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளதால் மேலும் இரண்டு சேவைகள் மட்டுமே யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே இடம் பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

*(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை 08 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** அட்டகிரி, மூத்த விநாயகர் கோவிலடி, நவாலி, கலையரசி வீதி, சென். பீற்றர்ஸ் வீதி, வேலக்கை பிள்ளையார் கோவிலடி, வல்லிபுரம் நீர் வழங்கல், அம்பன், அம்பன் மருத்துவமனை, கடற்கரை பகுதி மணற்காடு, குடத்தனை, குடத்தனை நீர் வழங்கல், மணற்காடு, மந்திகை, முள்ளி, நடுக்குடத்தனை, பொற்பதி, உபயகதிர்காமம், வலிகண்டி, வல்லிபுரம் கோயில் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** வீரபுரம், அறவந்துலாவ, எல்லப்பர் மருதங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம்தடைப்படும். (நி-4)

# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## மனச்சோர்வை வெல்ல ஓர் வழி வலிவுடன் எதிர்த்து நிற்றல்

இலட்சியக் குறைபாடுதான் இன்றைய இளைஞர்களின் மனச்சோர்விற்கு முக்கிய காரணமாகும். இவர்களுக்கு வாழ்க்கையே அர்த்தமற்றதாகத் தோன்றுகின்றது. போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தைக் கண்டு இவர்கள் பயப்படுகிறார்கள் அல்லது வருத்தம் தரும் தூண்டுதல்களால் மேலெழ முடியாது மூழ்கி விடுகிறார்கள். இவர்களுக்கு உயர்ந்த எண்ணங்களை ஊட்டும் ஒரு தூண்டுதல் தேவை. ஆன்மிகம் தான் அந்தத் தூண்டுதல். அதுதான் ஆன்மாவை எழுச்சி பெறச் செய்யக்கூடும்.

மனவலிமையுடன் எதிர்த்து நிற்றல் தான் மகச்சோர்விற்கு மாற்று ஆகும். போராடுவதற்கு ஆர்வம் குறையும்போது மனச்சோர்வு ஏற்படுகிறது. மனச்சோர்வு என்றால் சக்தியில் குறைபாடு என்று [illegible] வலிமையுடன் எதிர் நிற்றலும் [illegible] எழும் சக்தி. (தொடரும்)

# இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**இந்த ஊன உடம்பை முழுவதும் காண்பதற்கு இரு நிலைக் கண்ணாடிகள் தேவைப்படுவது போல் ஞானமே வடிவாய் உள்ள கடவுளைக் காண்பதற்கும் இரு கண்ணாடிகள் வேண்டும்.**

**அவை தொழிற்சாலையில் செய்ததன்று. வேதாகமத்தில் விளைந்தவை. ஞானமூர்த்தியைக் காண இரு நிலைக்கண்ணாடிகள் வேண்டும். ஒரு கண்ணாடி திருவருள், மற்றொன்று குருவருள். இந்த இரு கண்ணாடிகளின் முனையால் ஞானமே வடிவான இறைவனைக் காணவேண்டும். (தொடரும்)**

# அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## நம் கனவில் எக்கடவுள் வந்தால் என்ன பலன்?

நம் கனவில் சிவன் வந்தால் நம் தொடர்ச்சியான தியான பயிற்சியில் ஈடுபட வேண்டும் என்றாகும்.

முருகன் வந்தால் நாம் நினைத்த காரியம் கைகூடும் என்றாகும்.

விநாயகர் வந்தால் நாம் புதிதாக தொடங்கும் வேலையில் நல்லவையே நடக்கும் என்றாகும்.

பெருமாள் வந்தால் புதிதாக தொடங்கும் தொழில் நன்கு வளரும் என்றாகும்.

விஷ்ணு பகவான் வந்தால் நாம் செல்வந்தர் ஆகுவோம் என்றாகும்.

அம்பாள் கனவில் வந்தால் வீட்டில் நல்ல சுப காரியங்கள் நிகழும். குலதெய்வம் கனவில் வந்தால் குலதெய்வ வழிபாடு மேற்கொள்ள வேண்டும். மேலும் நல்ல சுபிட்சம் வருவதை குறிக்கும்.

யானை துரத்துவது போல கனவு கண்டால் விநாயகருக்கு ஏதோ நீங்கள் செய்ய வேண்டியது பாக்கி உள்ளது என அர்த்தம்.

கோவில் கோபுரம் வந்தால் பூர்வ ஜென்ம பாவம் நீங்கி விட்டது போலவும் நல்ல நிலைக்கு செல்லப் போகிறீர்கள் என்றும் அர்த்தமாகும்.

கடவுள் உங்களிடம் பேசுவது போல கனவு வந்தால் வாழ்க்கையில் குறை இன்றி, நல்லது உண்டாகும் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவிருக்கும் மூன்றாவது அலையை எதிர்க்க தயாராக வேண்டும் இந்தியா

(டில்லி)

**இந்தியாவில் தினசரி 4 ஆயிரம் கொரோனா மரணங்கள், 4 இலட்சம் வரையான தொற்று நோயாளர்கள் உறுதிப் படுத்தப்பட்டுவரும் நிலையில் தொற்று நோயின் மூன்றாவது அலையில் நாடு சிக்கிக்கொள்வது தவிர்க்க முடியாதது என இந்திய அரசாங்கத்தின் உயர்மட்ட விஞ்ஞான ஆலோசகர் கே.விஜயராகவன் எச்சரித்துள்ளார்.**



தொற்று நோயின் இரண்டாவது அலையில் நோயாளர்களைச் சமாளிக்க முடியாது இந்தியா திணறி வருகிறது.

சிகிச்சை பற்றாக்குறையின் தீவிர நெருக்கடியின் மத்தியில் கடந்த வாரத்தில் உலகெங்கும் பதிவான ஒட்டுமொத்த தொற்று நோயாளர்களில் 50 வீதமானோர் இந்தியாவில் பதிவாகியுள்ளதாகவும்அத்துடன் மரணங்களில் 25 வீதம் இந்தியாவில் பதிவானதாகவும் உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்சி சன் கிடைக்காமல் வீதிகளிலும் வாகனங்களிலும் பரிதாபமாகப் பலர் உயிரிழந்து வருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்குகளை செய்வதிலும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான நிலையிலேயே கொவிட்-19 தொற்று நோயின் மூன்றாவது அலையை இந்தியா விரைவில் எதிர்கொள்ளும்.

அதற்கு நாடு தயாராக இருக்க வேண்டும் என அரசாங்கத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகர் கே.விஜயராகவன் எச்சரித்துள்ளார்.

மிக அதிகளவு கொரோனா வைரஸ் தற்போது மக்கள் மத்தியில் பரவி வருவதால் மூன்றாவது அலை தவிர்க்க முடியாதது என நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

எனினும் மூன்றாவது அலை எப்போது தாக்கும்? என்பது குறித்த காலவரையறையை அவர் அறிவிக்கவில்லை.

இந்தியாவில் முதல் 10 மில்லியன் தொற்று நோயாளர்கள் 10 மாதங்களில் உறுதிப்படுத்தப்பட்டனர். தற்போது நான்கே மாதங்களில் 10 மில்லியன் பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

**உலகளவில் கொரோனா**
**உயிரிழப்பு :-3 257 615**
**தொற்று :-155 888 185**
**(நேற்றைய நிலவரம்)**

## பசுமைக்கு ஒட்சிசன் தட்டுப்பாடு

(சென்னை)

கொரோனா முதல் அலையில் ஒட்சிசன் தேவை 10 சதவீதம் அளவுக்கு இருந் தது. ஆனால் தற்போது 2 ஆவது அலையில் கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களில் 60 சதவீதம் பேருக்கு ஒட்சிசன் உதவி தேவைப்படுகிறது.

கடந்த மாதம் வரை தமிழக அரசு மருத்துவமனைகளில் ஒட்சிசன் தேவை 250 தொன் ஆக இருந்தது.

ஆனால் தற்போது அது இரட்டிப்பாகி தினசரி தேவை 500 தொன் ஆக உயர்ந்துள்ளது. அடுத்த 10 முதல் 15 நாட்களில் ஒட்சிசன் தட்டுப்பாடு மிகப்பெரிய அளவுக்கு ஏற்பட வாய்ப்பு இருப்பதாக மருத்துவர்கள் அச்சம் அடைந்து உள்ளனர்.(நி-4-8)

## படத்தில் வில்லன் நிஜத்தில் கதாநாயகன்

(டில்லி)

தமிழ் சினிமாவில் பல படங்களில் வில்லனாக நடித்த பிரபலமானவர் நடிகர் சோனு சூட். கர்நாடக மாநிலம் பெங்களூருவில் கொரோனா நோயாளிகள் 22 பேர் ஒட்சிசன் இல்லாமல் உயிருக்குப் போராடி வருவதாகவும் அவர்களைக் காப்பாற்ற உதவி கேட்டு நடிகர் சோனு சூட்டை அணுகி உள்ளனர். இதையடுத்து அவர்களுக்கு உடனடியாக ஒட்சிசன் சிலிண்டர்கள் கிடைக்க ஏற்பாடு செய்து கொடுத்து 22 பேரின் உயிரைக்காப்பாற்றி உள்ளார் சோனு சூட். அவரின் இந்தச் செயலுக்குப் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. (நி-4-8)

## நடிகர் பாண்டு காலமானார்



(சென்னை)

கொரோனா பாதிப்பின் காரணமாக நகைச்சுவை நடிகர் பாண்டு மற்றும் அவரது மனைவி ஆகியோர் சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று அதிகாலை நடிகர் பாண்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பாண்டுவின் மறைவுக்குத் திரையுலகினர் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (நி-4-8)

## உலகிலேயே இதுவே அதிகமான தொற்றுறுதி


(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸின் 2 ஆம் அலை கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது. தினசரி நோய்த் தொற்றுகளின் எண்ணிக்கை தொடர்ந்து 4 இலட்சத்தைக் கடந்துள்ளது.

இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு நிலவரம் குறித்து மத்திய சுகாதார அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்தத் தகவலின்படி இந்தியாவில் நேற்று முன்தினம் மட்டும் 4 இலட்சத்து 12 ஆயிரத்து 262 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மொத்த பாதிப்பு 2 கோடி 10 இலட்சத்து 77 ஆயிரத்து 410 ஆக உயர்ந்துள்ளது.



நேற்று முன்தினம் மட்டும் 3 ஆயிரத்து 980 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 30 ஆயிரத்து 168 ஆக உயர்ந்துள்ளது.

நாடு முழுவதும் நேற்று முன்தினம் வரை 16 கோடி 25 இலட்சத்து 13 ஆயிரத்து 339 நபர்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.(நி-4-8)

## தந்தையின் சிதை நெருப்பில் பாய்ந்த மகள்


(டில்லி)

ராஜஸ்தான் மாநிலம் பார்மர் நகரைச் சேர்ந்த 73 வயதாகும் தாமோதர்தாஸ் கொரோனாப் பாதிப்பால் கடந்த செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி இறந்தார்.

மயானத்தில் தந்தையின் உடலை எரித்தபோது அவரது இளைய மகள் திடீரென சிதை நெருப்பில் பாய்ந்து விட்டார். அவரைப் பிறர் பிடித்து இழுத்துக் காப்பாற்றி விட்டாலும் 70 சதவீத தீக் காயங்கள் அடைந்தார்.

முதலில் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேல் சிகிச்சைக்காக ஜோத்பூர் நகர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதுதொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். (நி-4-8)

## தீபிகாவுக்கு கொரோனா



(டில்லி)

பெங்களூருவில் தனது பெற்றோருடன் தீபிகா படுகோனே வசித்து வருகிறார். சில தினங்களுக்கு முன்பு தீபிகா படுகோனேவின் குடும்பத்தினருக்குக் கொரோனாத் தொற்று உறுதியானது.

இந்நிலையில் தீபிகா படுகோனேவுக்கு தற்போது பரிசோதனை செய்ததில் அவருக்கும் கொரோனாத் தொற்று இருப்பது உறுதியானது. இதையடுத்து அவர் வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டு சிகிச்சை பெற்று வருகிறார். (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். போதனா...

போதனா வைத்தியசாலை பதில் பணிப் பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள் ளார்.

நேற்று மாலை ஊடகவியலாளர்க ளைச் சந்தித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார். (ம-03,33,101)

## தமிழகத்தின்...

வுள்ள (மே.7) திமுக தலைமையிலான புதிய அமைச்சரவை பதவியேற்பு விழாவை அனைவரும் வீட்டிலிருந்தே காணுங்கள் என முதல்வராக பதவியேற்க உள்ள திமுக தலைவர் ஸ்டாலின் கூறி யுள்ளார். (ம-03)

## வவுனியா பொரு...

அலை யின் தாக்கமானது வேகமாக அதிகரித்து வரும் நிலையில், நாடு பூராகவும் 8 ஆயி ரம் நோயாளர்கள் சிகிச்சை பெறத்தக்க வகையில் கொரோனா சிகிச்சை மையங் களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாக கோவிட் செயலணியின் தலை வரும், இராணுவத் தளபதியுமான சவேந் திர சில்வா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், வவுனியா பொருளா தார மத்திய நிலையத்தில் கொரோனா தொற்றாளர்களை தங்க வைத்து சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. 100 கட்டில்களைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ள குறித்த சிகிச்சை நிலையத்திற்கு தேவையான ஏற்பாடுகளை இராணுவத்தினர் முன் னெடுத்துள்ளனர். (ம-03,250)

## வவுனியாவில்...

தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் குறித்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஹெப்பிற்றிக்கொல்லாவை பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டிற்கு விடுமுறையில் சென்று மீண்டும் கட மைக்கு திரும்பியபோது மேற்கொண்ட பரிசோதனையில் அவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. (ம-03,250)

## நாட்டில்...

றாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கட்டில்கள் நிரம்பியுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள பிரதான தனி யார் மருத்துவமனைகள் அரசாங்கத்தின் அனுமதியின்பேரில் கொரோனா தொற் றாளர்களுக்கு தனியான விடுதிகளை ஏற்படுத்தியுள்ளன.

தனியார் மருத்துவமனைகளில் ஏற் படுத்தப்பட்டுள்ள இந்த விடுதிகள் கொரோ னாத் தொற்றாளர்களால் நிரம்பியுள்ளன. (ம-03)

## கொரோனாவால்...

சனத் லெனரோல் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணிப் பெண்கள் தொற்றுக்கு உள் ளாகின்றமை தொடர்பில் நேற்று (06) கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

முதல் 28 வாரத்தில் தொற்றுக்கு உள்ளானவர்களுள் 80 சதவீதமானவர் களுக்கு நோய் அறிகுறிகள் எதுவும் வெளிக்காட்டவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-03)

## யாழ். போதனாவில்...

டியைச் சேர்ந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வேளை நேற்று முன்தினம் உயிரிழந்தார். இவ் வாறு உயிரிழந்தவரின் சடலம் வீட்டா ரிடம் வழங்கப் பட்டது.

இந்நிலையில் இறந்தவருக்குக் கொரோனா என்பதால் மரண வீட்டுக்குச் சென்ற அனைவரையும் தனிமைப்படுத் தலுக்கு உட்படுத்துமாறு சுகாதாரப் பிரி வினர் அறிவுறுத்தியுள்ளனர். (ம-03,33)

## யாழில் இளை...

த்துடன் இருந்த 6 இளைஞர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

சங்கானை சுகாதார வைத்திய அதி காரி பிரிவில் நான்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் 23(ஆண்), 26 (பெண்) , 30(ஆண்), 25(ஆண்) வயதுகளை உடையவர்கள். சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதி காரி பிரிவில் இரண்டு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் 25 (ஆண்), 24(பெண்) வயதுகளை உடையவர்கள். (ம-03)

## தட்டுப்பாடு...

மதியை வழங்காவிடில், நாட்டில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவும் என லாப் கேஸ் நிறுவனத்தின் தலைவர் டபிள்யு. கே.எச். வெகபிட்டிய தெரிவித்தார்.

கேஸ் நிறுவனங்கள் நஷ்டமடை யாமல் கொண்டு செல்வதாயின் 12.5 கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலை 421 ரூபாய் அதிகரிக்கப்பட வேண்டும். அவ்வாறு நடைபெறாவிடின், நாட்டில் சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு நிலவும் நிலை ஏற்படும்" என்றார். (ம-03)

## யாழில்...

வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக் கின்றன.

இதன்படி நேற்று 707 பேருக்கு நடத் தப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனையில் யாழ். மாவட்டத்தில் 20 பேருக்கும், முல்லை த்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கும், கிளி நொச்சியில் 7 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டிருந்த இருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ள நிலையில் குடாநாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 21 ஆகவும் வடக்கு மாகா ணத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 27 ஆகவும் அதிகரித்துள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் வீதி யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த 77 வயது டைய முதியவர் ஒருவரும் இளவாலை யைச் சேர்ந்த 75 வயதுடைய மூதாட்டி ஒருவரும் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரி ழந்தனர். (ம-3,18,33,316)

## தேசிய...

தீர்மானித்துள்ளது.

இது பற்றிய ஏற்பாடுகளை முன்னெ டுக்கும் பொருட்டு, கடந்த ஏப்பிரல் 30 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத் தில் பௌத்த கலா சார அமைச்சின் செயலாளர் தலை மையில் விசேட கூட் டம் ஒன்று நடை பெற்றது.

இதில் படைத் தரப்பினர், பொலி ஸார், அரச உத்தி யோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிலைமை இது வாக இருக்கையில், கொரோனாத்தொ ற்று வேகமாக பரவி வரும் இந் நேரத் தில் வெசாக் தேசிய நிகழ்வை நயினா தீவில் நடாத்துவது ஆபத்தானது என பலரும் தமது கருத் துக்களை பதிவு செய்து வருகின்ற னர்.

இதன் காரண மாக வெசாக் தேசிய நிகழ்வில் 200 பேர் பங்குபற்றுதல் என்ற மட்டுப்படுத்த ப்பட்ட எண்ணிக் கையோடு வெசாக் தேசிய நிகழ்வு நடைபெறலாம் என தகவல் அறிந்த வட் டாரங்கள் தெரிவித் துள்ளன. (ம-03)

## கொரோனாவால்...

இரவு 11 மரணங்களும் பதிவாகியுள்ளன.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்றால் மரணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 745ஆக அதி கரித்துள்ளதுடன், மரணமடைந்த 25 பேரும் 35 தொடக்கம் 82 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

நாட்டில் நேற்றும் கொரோவால் + 1,895 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கொரோனாவால் பாதிக் கப்பட்டவர்கள் எண்ணிக்கை +119,424 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

## கொரோனா அபா...

நடைமுறைக்களை இறுக்கமாக கடைப் பிடிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரி சோதனையில் கிளிநொச்சி மாவட்டத் தினைச் சேர்ந்த 07 பேர் தொற்றாளர் களாக அடையாளம் காணப்பட்டுள்ளனரர். அவர்கள் அனைவரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காகச் சென்றவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-03,316)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532





























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2020ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் வரலாறு பாடத்தினை 129 மாணவர்கள் கல்வி கற்று 62 பேர் A சித்தியும் 40 பேர் B சித்தியும் 21 பேர் C சித்தியும் 6 பேர் S சித்தியும் (100% சித்தி) பெற்று நிறுவனத்துக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவர்களில் A, B பெற்ற மாணவர்களின் முழுமையான விபரம்,**

| இல. | மாணவர் பெயர் | நிறுவனம் | பெறுபேறு | வரலாறு பெறுபேறு | Rank |
|---|---|---|---|---|---|
| 1 | S.நிலானி | HAC | 3A | A | 1 |
| 2 | K.ஜோன் ஹென்றி | DCM | 2AC (Old) | A | 1 |
| 3 | S.அனிஸ்ரிகா | CCA | 3A | A | 03 |
| 4 | S.தாரணி | HAC | 3A | A | 04 |
| 5 | K.ஜினோசா | HAC | 3A | A | 08 |
| 6 | S.நிதுஷா | CCA | 3A | A | 09 |
| 7 | த.அஜித்தா | HAC | 3A | A | 14 |
| 8 | இ.டிலைக்சனா | HAC | 3A | A | 18 |
| 9 | இ.பிரியங்கா | CCA | 3A | A | 21 |
| 10 | பா.நிரஞ்சனா | CCA | 2AB | A | 33 |
| 11 | S.மில்ரன் | HAC | 3A | A | 30 |
| 12 | K.கம்சா | HAC | 3A | A | 37 |
| 13 | ந.விதுர்சியா | CCA | 3A | A | 41 |
| 14 | சு.தேனுஜா | CCA | 3A | A | 50 |
| 15 | சி.இளநதி | HAC | 3A | A | 99 |
| 16 | K.துர்சிகா | HAC | 3A | A | 62 |
| 17 | செ.தபோசன் | CCA | 2AB | A | 08 |
| 18 | வி.திசாயினி | CCA | 2AB | A | 148 |
| 19 | அ.விதுஜா | CCA | 2AB | A | 54 |
| 20 | M.மதுசுயா | CCA | 2AB | A | 52 |
| 21 | S.சஞ்சீவன் | CCA | 2AB | A | 44 |
| 22 | சி.பிரதீபா | CCA | 2AB | A | 35 |
| 23 | ர.டிசானி | CCA | 2AB | A | 151 |
| 24 | ஞா.சாளினி | HAC | 2AB | A | 311 |
| 25 | சி.குவேதா | CCA | 2AB | A | 100 |
| 26 | உ.அபிதா | CCA | 2AB | A | 79 |
| 27 | தெ.வினோஜா | HAC | 2AB | A | 177 |
| 28 | டெ.கம்சிகா | HAC | 2AB | A | 96 |
| 29 | N.சிந்துஜா | HAC | 2AB | A | 101 |
| 30 | த.கோகிலவாணி | VN | 2AB | A | 160 |
| 31 | S.சஞ்சியா | CCA | 2AB | A | 86 |
| 32 | தே.கம்சத்வனி | HAC | 2AB | A | 195 |
| 33 | ம.ரதனிகா | CCA | 2AB | A | 42 |
| 34 | S.யுவன்ஜா | CCA | A2B | A | 192 |
| 35 | N.கலைவாணி | VN | A2B | A | 124 |
| 36 | த.தவஜினி | VN | A2B | A | 113 |
| 37 | த.ஜெனிசிகா | HAC | 2AC | A | 198 |
| 38 | ம.மயூரன் | HAC | 2AC | A | 82 |
| 39 | K.கிரிசாந் | CCA | 2AB | A | 139 |
| 40 | க.தீபிகன் | CCA | A2B | A | 193 |
| 41 | உ.பிரியங்கா | HAC | A2B | A | 106 |
| 42 | ம.ஜெசித்தா | CCA | 2AC | A | 100 |
| 43 | லோ.திவ்யா | DCM | 2AC | A | 150 |
| 44 | S.லக்சனா | VN | ABC | A | - |
| 45 | அ.அஸ்வினியா | VN | ABC | A | - |
| 46 | M.துவாரகா | CCA | ABC | A | - |
| 47 | ச.ஜொயானா | HAC | 2AC | A | - |
| 48 | கு.லக்சியா | CCA | 2AC | A | - |
| 49 | கு.கஜானினி | CCA | A2C | A | - |
| 50 | கு.கஜானி | VN | A2B | A | - |
| 51 | து.கம்சாயினி | CCA | 2AC | A | - |
| 52 | K.கஜானன் | CCA | ABC | A | - |
| 53 | M.கபிஷா | CCA | ABC | A | - |
| 54 | வ.நிறையினி | VN | ABC | A | - |
| 55 | வி.கயல்விழி | CCA | ABC | A | - |
| 56 | க.கஜீந்தினி | CCA | ABC | A | - |
| 57 | செ.விஜுஷா | CCA | A2B | A | - |
| 58 | தே.மனோஜா | CCA | A2B | A | - |
| 59 | ந.டினோஜா | CCA | | A | - |
| 60 | S.நிரோஜினி | CCA | 2AC | A | - |
| 61 | நா.ரஞ்சிதமலர் | HAC | 2AB | B | - |
| 62 | பா.பகிர்தா | VN | A2B | B | - |
| 63 | த.அஜந்தன் | CCA | ABC | B | - |
| 64 | ஜெ.குவிந்தினி | CCA | 3B | B | - |
| 65 | S.கோபிசன் | CCA | 2BC | B | - |
| 66 | பா.விஜயகாந் | CCA | 2BC | B | - |
| 67 | வ.டக்சனா | VN | 2AB | B | - |
| 68 | அ.சிலெக்சனா | VN | 3B | B | - |
| 69 | மோ.லதீக்கா | HAC | 2BC | B | - |
| 70 | என்.பிரஜோதிகா | HAC | 2AB | B | - |
| 71 | தே.ஜெசுதா | CCA | A2B | B | - |
| 72 | தே.கவிதா | HAC | ABC | B | - |
| 73 | வி.தர்சிகா | DCM | 3B | B | - |
| 74 | எம்.தனுசியா | DCM | 3B | B | - |
| 75 | ச.சோபிதா | CCA | A2B | B | - |
| 76 | க.தயாளினி | CCA | 2BS | B | - |
| 77 | ஆர்.ரசிதா | CCA | BCS | B | - |
| 78 | த.கௌசி | CCA | A2B | B | - |
| 79 | கு.ரம்ஷிகா | CCA | B2C | B | - |
| 80 | எஸ்.மிதுசன் | HAC | 2AB | B | - |
| 81 | க.ஜனோசிகா | DCM | 3B | B | - |
| 82 | ல.பிரியங்கா | CCA | 2AB | B | - |
| 83 | ஆர்.சுவேதிகா | CCA | 2BC | B | - |
| 84 | எஸ்.சங்கீர்த்தனன் | HAC | B2C | B | - |
| 85 | எஸ்.தாருகா | VN | | B | - |
| 86 | சா.சசீபா | VN | 2BC | B | - |
| 87 | எஸ்.வாசுகன் | CCA | A2B | B | - |
| 88 | அ.சுலேனுகா | HAC | 2BC | B | - |
| 89 | ஜெ.நபிசா | CCA | ABC | B | - |
| 90 | வி.ஜதுசா | CCA | 3B | B | - |
| 91 | கு.டிலைக்சனா | HAC | A2B | B | - |
| 92 | ப.கிரிசாந் | CCA | B2C | B | - |
| 93 | எ.அபிசாயினி | CCA | 2BC | B | - |
| 94 | S.சாருஜா | DCM | ABC | B | - |
| 95 | கெ.கஜீதரன் | DCM | ABC | B | - |
| 96 | S.பௌணிகா | HAC | ABC | B | - |
| 97 | S.அபிநயா | CCA | 2AB | B | - |
| 98 | S.தேனுகா | HAC | 2BC | B | - |
| 99 | S.ரதிநிலா | CCA | 2BS | B | - |
| 100 | க.பிரதீபன் | HAC | 3B | B | - |
| 101 | சி.ஜானுஷன் | HAC | 2BC | B | - |
| 102 | ஜெ.சஜீவன் | VN | BCS | B | - |


S.நிலானி
3A


K.ஜோன் ஹென்றி
2AC (Old)


S.அனிஸ்ரிகா
3A


S.தாரணி
3A


K.ஜினோசா
3A


S.நிதுசா
3A

129 பேரில் 100க்கு மேற்பட்டவர்கள் பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிக்கு தெரிவாகியுள்ளனர். இவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சரித்திரம் படைக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- வரலாறு கற்பித்த ஆசிரியர் **S.S.Y. பிரதீபன்**
மற்றும் தனியார் கல்வி நிறுவன நிர்வாகத்தினர்
**DCM - யாழ்.நகர், NAC - மீசாலை, CCA- சுன்னாகம், VN - வவுனியா**

கொரோனா தீவிரமாக பரவும் நிலையில்

# மதுபானம் விற்பனை தொடர்பாக சுகாதார வழிகாட்டல் வெளியீடு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்று பரவல் தீவிரமடையும் நிலையில் மதுபானசாலைகள், மது அருந்தும் இடங்கள் மற்றும் மதுபான விற்பனை அனுமதியுடன் கூடிய உணவகங்களுக்கான சுகாதார வழிகாட்டி மதுவரி திணைக்களத்தினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி 10 வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

மதுபான விற்பனை நிலையங்களை உரிய நேரத்தில் மாத்திரம் திறக்க முடியும்.

வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் கள்ளு அருந்தும் இடங்கள் மறுஅறிவித்தல் வரை பூட்டு.

நட்சத்திர ஹோட்டல்களில் சுற்றுலா பயணிகளுக்காக இரவு 10 மணி வரை மாத்திரம் திறக்க அனுமதி.

ஹோட்டல் மதுபான நிலையங்கள் மறுஅறிவித்தல் வரை பூட்டு.

திரையரங்கு மதுபானசாலை மறு அறிவித்தல் வரை பூட்டு.

உணவகங்களுக்கான மதுபான நிலையம் மறு அறிவித்தல் வரை பூட்டு.

வாடிவீடு மதுபானசாலை இரவு 10 மணி வரை திறக்க அனுமதி.

களியாட்ட விடுதிகளுக்கான மதுபான நிலையம் மறுஅறிவித்தல் வரை பூட்டு.

22A அனுமதிப் பத்திரம் உள்ள இடங்கள் உரிய நேரத்தில் மாத்திரம் திறக்க அனுமதி.

22B அனுமதிப் பத்திரம் உள்ள இடங்கள் மறு அறிவித்தல் வரை பூட்டு.

ஆகிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ம-3)

**Physics**
**T.K.Kajan B.sc**
தொடர்பு: 077 653 1177 (6823)

**வேலையாள் தேவை**
கொக்குவிலில் உள்ள கணனி நிறுவனத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 076 663 7061 (6819)

**CHEMISTRY**
**S.Vasu B.sc**
**Day/2023/2021 A/L**
வகுப்புகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்
**076 791 0034** (6824)

**கணனி திருத்தம்**
கணனி, லப்டொப் சிறந்த முறையில் திருத்தி தரப்படும்.
**PC Garage**
255B, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (6821)
தொடர்புகளுக்கு:
077 967 2239, 021 222 8797

**சோ(f)பா கிளீனிங்**
தங்கள் கறைபடிந்த சோ(f)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புக்களை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள். (6818)
**077 224 2787**

**அண்ணா** EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-2060)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000/- பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
**UK-1000/=Kg**
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-2059)
**0768226240** DHL

**D.C.M N - யாழ்.நகர்**
( வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)
**A/L 2020/Day Class** ஆகிய பிரிவுகளில் முன்னிலை பெறுபேற்றினை பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிபெற்ற எமது நிறுவன மாணவச் செல்வங்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
- **A/L Day Class** கலை, வர்த்தகம் அனுமதிக்கு - 08.05.2021 - 8.00 மணி
- **A/L 2020** சித்தியடைய தவறிய மாணவர்களுக்காக விஷேட வகுப்புக்கள் ஆரம்பம்.
- **A/L 2021, 2022, 2023** ஆகிய பிரிவுக்கான ZOOM Class நடைபெறுகின்றது. வெளிமாவட்ட மாணவர்களும் பங்குபற்றலாம்.

நிர்வாகி - **077 011 9434** (6822)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.